மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

மலர் 8 • இதழ் 6 • டிசம்பர் 2023 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

எண்ணங்கள்

## ஆர்வம்
### சிறப்பிதழ்



RAMRAJ ©

# COTTON

## WHITE SHIRTS



மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
வேட்டிகள் • சர்ட்டுகள் • பனியன்கள்

எதில் நமக்கு ஆர்வம் என்று கண்டறிந்து
அந்தத் திசையில் வளர்ச்சி பெற உழைத்து
வாழ்வில் முன்னேற வழிகளைச் சொல்லும்



# ஆர்வம்
## சிறப்பிதழ்

என்ற இந்தப்
பயனுள்ள நூலை
வழங்குவதில்
பெருமிதம்
கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

குழந்தைகளின் இயல்பே கற்றுக்கொள்ளும் ஆர்வம்தான். ஒவ்வொரு நாளும் புதிய புதிய விஷயங்களை ஆர்வத்துடன் தேடித்தேடிக் கற்றுக்கொள்ளும்போதே, குழந்தை ஆரோக்கியமாக வளர்கிறது. ஆர்வத்துடன் கேள்விகளைக் கேட்கிற குழந்தைகள், ஆளுமைமிக்கவர்களாக வளர்கிறார்கள்.

மனிதர்களுக்குள் ஆர்வம் என்கிற உணர்ச்சி இயற்கையாகவே அமைந்திருக்கிறது. எதில் நாம் அதிக ஆர்வம் செலுத்துகிறோம் என்பதே முக்கியம். ஒவ்வொரு வயதிலும் கற்றல் செயல்முறையின் முக்கிய அங்கமாக ஆர்வம் என்கிற உணர்ச்சி உள்ளது. அது நம் வாழ்வை உயிரோட்டமுள்ளதாக மாற்றுகிறது. மனதைத் தூண்டி இளமையாக வைத்திருக்க உதவுகிறது. ஆர்வம் இல்லாத வாழ்வில், விரைவில் அனைத்தின் மீதும் ஒருவித சலிப்பு உண்டாகிவிடும்.

எதன் மீது நமது ஆர்வம் அதிகரிக்கிறதோ அதுவே நம் வாழ்வின் உயர்வையும் தாழ்வையும் தீர்மானிக்கிறது. விடிகிற ஒவ்வொரு நாளையும் சுவாரசியமாக மாற்றுவதற்கும், ஆர்வம் என்கிற உணர்ச்சியே அடிப்படை. நல்லவற்றின் மீது ஆர்வம் குறையாத மனிதர்கள் நிறைவாழ்வு வாழ்கிறார்கள். தீயவற்றின் மீது ஆர்வத்தை அதிகம் செலுத்துகிறவர்கள் அதன் விளைவுகளைச் சந்திக்கின்றனர். ஆர்வம் என்பது ஒருவகையில் அறிவியல்பூர்வமான உணர்ச்சி. கற்றுக்கொள்வதற்கும், புதிய விஷயங்களைப் புரிந்துகொள்வதற்கும், அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அறிந்துகொள்வதற்கும் ஆர்வமே அடிப்படை ஆகும்.

உறவுகளுக்கு மத்தியில், தன்னைப் பற்றி யோசிப்பதைவிட மற்றவர்களைப் பற்றிச் சிந்திக்கவே அதிக ஆர்வத்தைக் காட்டுகின்றனர். பத்திரிகைகளில், தொலைக்காட்சிகளில் அதிமுக்கியமான செய்திகளைவிட, கிசுகிசு செய்திகளைப் பற்றியே அதிக ஆர்வத்தைத் தூண்டுகின்றனர். அறிவுப்பூர்வமான நிகழ்ச்சிகளுக்கு மக்களின் ஆதரவும் அதிகம் கிடைப்பதில்லை. மாணவர்களுக்கு அறிவின் தேடலைத் தூண்டும் விநாடி வினா நிகழ்ச்சி வந்தால் அதைப் பார்க்க ஆர்வம் வருவதில்லை. கவர்ச்சியையும், உறவுச் சிக்கல்களை அதிகப்படியாகவும் காட்டும் நிகழ்ச்சிகளுக்கு அதிக டி.ஆர்.பி கிடைக்கிறது. இந்த ஆர்வமே சமூகத்திலும் எதிரொலிக்கும். உழைப்பதில் ஆர்வம் செலுத்துகிற சமுதாயம் வளர்ச்சிப் பாதையிலும், பொழுதைப் போக்குவதில் அதிக ஆர்வம் செலுத்துகிற சமூகம் வீழ்ச்சிப் பாதையிலும் போவது தவிர்க்க முடியாதது.

ஆர்வம் என்பது அற்புதமான மந்திரச் சாவி. அது எத்தகைய இறுக்கமான கதவையும் எளிதில் திறக்க உதவும். ஆர்வமுள்ளவர்கள்தான் தெரியாத



விஷயங்களைத் தெரிந்துகொள்ள முயற்சி செய்கிறார்கள். கேள்விகளைத் தொடர்ந்து கேட்கிறார்கள். திறமையை வளர்த்துக்கொள்வதிலும், நினைத்த காரியத்தை முடிப்பதிலும் தீவிரமானவர்களாக இருக்கிறார்கள். சவால்களைச் சந்திக்கவும், அறியாத புதிய விஷயங்களைக் கற்கவும் தயாராக உள்ளனர். இது நேர்மையான ஆர்வம். இது ஒருவரை அவர் ஆர்வம் செலுத்தும் துறையில் நிபுணராக மாற்றும். சிறந்த ஊழியர், சிறந்த தொழில் முனைவோர், சிறந்த ஆசிரியர், சிறந்த அரசியல்வாதி, சிறந்த அறிஞர், சிறந்த பேச்சாளர் எனச் 'சிறந்த' என்கிற அடைமொழியைத் தரும்.

எதிர்மறையான ஆர்வம் நம்மைப் பின்னோக்கி இழுக்கும். சமூக வலைதளங்களில் அதிக நேரத்தைச் செலவிடும் நபர்கள் இப்போது வயது வித்தியாசம் இல்லாமல் பெருகி வருகின்றனர். ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் வரை இணையத்தில் உலவுகின்றனர். ஆர்வத்துடன் பலர் செய்கிற இந்த நேர முதலீடு எதையும் புதிதாகக் கற்க உதவுவதில்லை. மாறாக கவனச்சிதறலை உண்டாக்குகிறது. அரை மணி நேரம் எதையும் கவனித்துக் கேட்கிற, பார்க்கிற திறனைக் குறைக்கிறது. மனதுக்கும், உடலுக்கும் தீமை பயக்கும் விஷயங்களில் அதிக ஆர்வம் செலுத்துபவர்கள் தங்கள் வாழ்வின் முக்கியத் தருணங்களைத் தொலைக்கின்றனர். தங்களை நேசிக்கும் மனிதர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

ஆர்வமுள்ளவர்களின் செயல்திறனை மதிப்பிட ஓர் ஆய்வு செய்தார்கள். அதில், அவர்கள் சுறுசுறுப்பானவர்களாகவும், எதையும் புரிந்துகொள்ள விருப்பமுள்ளவர்களாகவும் இருப்பது கண்டறியப்பட்டது. ஒருவர் தன் மனத்தடைகளைத் தாண்டி வரவும் ஆர்வம் மிகப்பெரிய உந்துசக்தியாக இருப்பதை அந்த ஆய்வில் உறுதி செய்தனர்.

போக்குவரத்து வசதிகூட இல்லாத இந்தியாவின் சிறிய தீவாக இருந்த ராமேஸ்வரத்தில் பிறந்த அப்துல் கலாம் அவர்களுக்குக் கல்வியின் மீது இருந்த ஆர்வம்தான், உலகம் போற்றும் விஞ்ஞானியாக அவரை உயர்த்தியது. கல்வியைக் கைவிட எத்தனையோ தடைகள் இருந்தாலும், அவருடைய ஆர்வம் எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்தது.

நான் வியாபாரத்தோடு தொடர்பில்லாத எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். ஆனாலும், 'வியாபாரம் செய்ய வேண்டும்' என்று 13 வயதிலேயே தீர்மானித்தேன். ஆர்வம்தான் என்னை பிசினஸ் நோக்கி இழுத்தது. வேட்டித் தொழிலின் அடிப்படை நுணுக்கங்களைத் தென்னிந்தியா முழுக்க வியாபாரம் செய்து பல ஆண்டுகள் கற்றுக்கொண்டேன். என் 23 வயதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தை ஆரம்பித்தேன். இன்று 'ராம்ராஜ்' என்றாலே 'வேட்டி' ஞாபகம் வருகிறது. இதற்குப் பின்னால் தணியாத ஆர்வமும், சுமார் 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட உழைப்பும் இருக்கிறது.

நான் வேட்டித் தொழிலில் இறங்கியபோது, எங்கள் திருப்பூர் பகுதியில் ஏற்றுமதி ஜவுளித்துறை வெற்றிகரமாக இருந்தது. எல்லோருமே அதைத்தான் செய்யச் சொன்னார்கள். 'யாருமே வேட்டி கட்டுவதில்லை. அதைப் போய் விற்கப் போகிறேன் என்கிறாயே' என ஆர்வத்தைக் குறைக்கும் வார்த்தைகளையே அதிகம் கேட்க முடிந்தது. ஆனால், 'இது ஒரு வாய்ப்பு. இது எனக்குத் தெரிந்த தொழில். இதில் புது மார்க்கெட்டை என்னால் உருவாக்க முடியும்' என்று ஆர்வத்துடன் இறங்கினேன்.

ஒருவேளை ஏற்றுமதித் தொழிலில் இறங்கியிருந்தால், நான் பெரும் பணக்காரனாக இருந்திருக்கலாம். ஆனால், பணம் என் நோக்கம் இல்லை. 'நெசவாளர்களுக்கு வாழ்வாதாரம் தர வேண்டும்' என்ற ஆர்வமே என்னை இந்தத் தொழிலில் இழுத்தது. அந்த நல்ல நோக்கம் என்னை ஜெயிக்க வைத்தது.

வேட்டியை நான் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. அது, பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக நம் முன்னோர்கள் உருவாக்கிய முதல் உடை. நம் பண்பாட்டின் பெருமிதமான அடையாளமாக இருக்கும் பாரம்பரிய உடை. அதில் மக்கள் ஆர்வம் காட்டாமல் இருந்த சூழலில் அதில் வித்தியாசங்களைக் காட்டி வெற்றி பெற முடிந்ததற்குக் காரணம், என் ஆர்வம். பாக்கெட் வைத்த வேட்டிகள், சிரமப்பட்டு கட்டாமல் ஒட்டிக்கொள்கிற வெல்க்ரோ வேட்டிகள், சட்டை நிறத்திற்கு ஏற்ப வண்ண நிற பார்டர் வைத்த வேட்டிகள், குழந்தைகளுக்குப் பிரத்யேக வேட்டிகள் என்று பல புதுமைகளை மேற்கொண்ட பிறகு வாடிக்கையாளர்கள் ஆர்வத்துடன் ராம்ராஜ் காட்டன் தயாரிப்புகளை வாங்கி உடுத்தினர்.

அன்றாட வாழ்வில் கற்றுக்கொள்ளவும், நமது தனித்திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் ஆர்வத்தைக் கைக்கொண்டால், வாழ்வு சிறக்கும். ஆர்வத்தை நமக்குள் அணையாத தீபமாக வளர்த்தெடுப்போம்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!

**கே.ஆர்.நாகராஜன்**

**நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்**

# உங்களுக்குள் இருக்கிறதா ஆர்வம்?

ஒரு சிறுவன் ஆர்வத்துடன் வயலின் வாசிக்கக் கற்றுக்கொண்டான். தினம் தினம் வகுப்புக்குப் போவான், வீட்டில் வந்தும் வாசித்துப் பழகுவான். எதிர்காலத்தில் தான் ஒரு சிறந்த வயலின் கலைஞராக மாறப் போவதாக அவன் கனவு கண்டான்.



ஒருநாள் அவன் இருந்த நகரத்தில் ஓர் இசை நிகழ்ச்சி. நாட்டின் மிகச்சிறந்த வயலின் மேதை அந்த இசை நிகழ்ச்சியில் வாசிக்க வந்திருந்தார். நிகழ்ச்சிக்குப் போன அவன், அவர் வாசித்த இசையின் இனிமையில் தன்னை மறந்தான். நிகழ்ச்சி முடிந்தபிறகு அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் தன் வயலினுடன் போனான். நீண்ட நேரம் காத்திருந்து அவரைச் சந்தித்து வணங்கினான்.

“என்ன விஷயம்?” என்று அவர் விசாரித்தார். ‘‘எதிர்காலத்தில் வயலின் கலைஞராக வர விரும்புகிறேன். நான் உங்களிடம் சில நிமிடங்கள் வாசித்துக் காட்டுகிறேன். என் கனவு சரியா, அல்லது வயலின் கற்றுக்கொள்வதில் நேரத்தை வீணடிக்கிறேனா என்று சொல்ல முடியுமா?” என அவரிடம் வேண்டினான் சிறுவன்.

அவர் சம்மதித்ததும் சிறுவன் இசைக்க ஆரம்பித்தான். ‘நாட்டின் மிகச்சிறந்த வயலின் மேதை முன்னால் வாசிக்கிறோம்’ என்ற உணர்வு அவனுக்குள் பதற்றத்தை ஏற்படுத்தியது. என்றாலும் நடுக்கம் இல்லாமல் அவன் இசைத்தான். இதுவரை தான் வாசித்த எல்லா இசைக்கோர்வைகளையும்விட மிகச் சிறப்பாக வயலின் வாசித்ததாக அவனுக்குத் தோன்றியது. வாசித்து முடித்துவிட்டு இசை மேதையைப் பார்த்தான். அவர் முகத்தில் ஏமாற்றத்தை வெளிப்படுத்தியபடி உதட்டைப் பிதுக்கினார். “ஓரளவு வாசிக்கிறாய். ஆனால், உனக்குள் ஆர்வம் தீயாக எரியவில்லை. அது இல்லாவிட்டால் உன்னால் திறமையான வயலின் கலைஞராக ஆக முடியாது” என்று சொல்லிவிட்டு எழுந்து போனார்.

நொறுங்கிய இதயத்துடன் சிறுவன் வீடு திரும்பினான். தினம் தினம் தான் ஆர்வமாக இசைத்த வயலினைத் தூக்கிப் பரணில் போட்டான். “இனிமேல் நான் வயலின் வாசிக்கப் போவதில்லை” என்று பெற்றோரிடம் அறிவித்தான். அப்பா செய்துவந்த வியாபாரத்தை அதன்பிறகே அவன் திரும்பிப் பார்த்தான். விடுமுறை நாட்களில் அங்கு போகத் தொடங்கினான். கொஞ்சம் கொஞ்சமாக வியாபார நுணுக்கங்கள் அவனுக்குப் பழகின. அப்பாவின் வியாபாரத்தை விரிவுபடுத்தினால் நன்கு சம்பாதிக்கும் வாய்ப்பு இருப்பதை உணர்ந்தான். ஆர்வத்துடன் அதைச் செய்தான். பழுத்த அனுபவம் வாய்ந்த அவன் அப்பாவே பிரமிக்கும் அளவுக்கு உழைத்தான்.

சில ஆண்டுகளில் அந்தப் பகுதியிலேயே மிகப்பெரிய தொழிலதிபர் ஆகிவிட்டான்.

ஒருநாள் விமான நிலையத்தில் அந்த இசை மேதையை மீண்டும் சந்தித்தான். அவரை நெருங்கித் தன்னை அறிமுகம் செய்துகொண்டவன், “நல்லவேளையாக என்னை நல்வழிப்படுத்தினீர்கள். உங்கள் யோசனையைக் கேட்டு நான் நேசித்த வயலினைத் தூக்கிப் போட்டேன். அப்போது அது மனவேதனை தந்தது. ஆனாலும் இப்போது நான் தொழிலதிபர் ஆனது அந்த முடிவால்தான். ஆனால், நான் சில நிமிடங்கள் வாசித்ததைக் கேட்டதுமே, எனக்கு ஆர்வம் இல்லை என்பதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?” என்று கேட்டான்.

இசை மேதை அவனைக் கூர்ந்து பார்த்து, “நான் எல்லோரிடமும் இப்படித்தான் சொல்வேன். நிஜமான ஆர்வம் இருப்பவர்கள் வயலினைத் தூக்கிப் போடமாட்டார்கள். என் கருத்தைப் புறக்கணித்துவிட்டுத் தொடர்ந்து வயலின் வாசிப்பார்கள். உனக்கு வயலின் விருப்பமாக மட்டுமே இருந்திருக்கிறது. ஆர்வம் பிசினஸில்தான் இருந்திருக்கிறது” என்று சொன்னார்.

ஆர்வம் என்பது உங்களை நீங்களே உணர்ந்துகொள்வது. உங்களுக்குள் ஆழமாகத் தேடி எதை உங்கள் வாழ்வின் ஆதாரமாக நினைக்கிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்வது. சிலர் அதை மிக இளம் வயதிலேயே கண்டடைந்துவிடுகிறார்கள். சிலருக்கு அது வாழ்வின் பிற்பகுதியில்தான் தெரியவருகிறது. ‘எனக்கு எதில் ஆர்வம் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?’ என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிப்பது கடினம். ஆனால், சில விஷயங்களைக் கடைப்பிடித்தால் அதைக் கண்டறியலாம்.

❖ பாதுகாப்பான வட்டத்தை விட்டு வெளியில் வந்து நிறைய விஷயங்களைச் செய்து பாருங்கள். ஆனால், எதிலும் அகலக்கால் வைக்காதீர்கள். புதுப்புது வேலைகள் அல்லது தொழில்களைச் செய்து பார்க்கும்போது, எதை உங்களால் ஆர்வத்துடன் செய்ய முடிகிறது என்பதை அறிவீர்கள். அதைப் பின்தொடருங்கள்.

❖ எதைச் செய்தாலும் விருப்பத்துடன் செய்யுங்கள். ‘நாம் எதைத் தேடுகிறோம்’ என்பதில் குழப்பம் இருந்தாலும், எந்த வேலையையும் ஈடுபாட்டுடன் செய்யுங்கள். அப்படிச் செய்யும்போதுதான், எது உங்களை இழுக்கிறது என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.

❖ ஒரு வேலையைச் செய்யும்போது ‘இது நமக்குச் சரிப்படாது’ என்று மனம் சொன்னால், அதன்பிறகும் அதில் மல்லுக்கட்டாதீர்கள். உடனே அதிலிருந்து வெளியில் வந்துவிடுங்கள். நேர இழப்பும் பொருள் இழப்பும் மிச்சமாகும். நீங்கள் விரும்பும் வேறொரு செயலை விரைவிலேயே தேட முடியும்.

❖ செய்யும் வேலையை முழுமையாகக் கற்றுக்கொள்ளுங்கள். சில விஷயங்களைக் கற்றுக்கொள்ளும்போது மனநிறைவு கிடைக்கும். அதைச் செய்யும்போது மகிழ்ச்சி அடைவீர்கள். மகிழ்ச்சியும் மனநிறைவுமாக ஒரு வேலையைச் செய்தால், அது உங்களுக்குப் பிடித்ததாக மாறும். நாளடைவில் அதுவே உங்களுக்கு ஆர்வம் ஏற்படுத்துவதாக மாறும் வாய்ப்பு உண்டு.

❖ ‘இந்த வயதுக்கு மேல் கற்றுக்கொள்வதா’, ‘இப்போது போய் இதைப் புதிதாகச் செய்வதா’ என்று எப்போதும் தயங்காதீர்கள்.



ஒரு வேலை அல்லது தொழிலைப் புதிதாகச் செய்வதற்கு வயதோ, வேறு எதுவுமோ தடை இல்லை. உங்களுக்கு எதில் ஆர்வம் இருக்கிறது என்பதைக் கண்டறிவது கிட்டத்தட்ட உங்களைக் கண்டறிவது போன்றதுதான். தயக்கமின்றி அதை எப்போது வேண்டுமானாலும் செய்யுங்கள்.

ஒரு சிறுவன் கிரிக்கெட் பயிற்சி மையத்துக்குச் சென்றான். வேகப்பந்து வீச்சாளர் ஆக வேண்டும் என்பது அவனுக்கு ஆசை. சில மாதங்கள் பயிற்சி எடுத்து ஆர்வத்துடன் தன் திறமையை வளர்த்துக்கொண்டான். பயிற்சியின்போது சில சமயம் பேட்டிங்கும் செய்ய வேண்டும். அப்படி ஆடும்போது பயிற்சியாளர் அவனைக் கவனித்தார். அவனது ஸ்டைல் அவரை ஆச்சர்யப்படுத்தியது. “உனக்குப் பந்துவீச்சு சரிவராது. நீ பேட்டிங் பயிற்சி செய்” என்றார். அந்தப் பையன் ஏமாற்றம் அடைந்தாலும், அவர் சொன்னதைச் செய்தான். அது தனக்கு நன்றாக வருவதை அதன்பின் உணர்ந்தான். ‘தனக்கு கிரிக்கெட்டில்தான் ஆர்வம், தனியாகப் பந்துவீச்சில் இல்லை’ என்பதைப் புரிந்துகொண்டான்.

அந்தச் சிறுவன் பின்னாட்களில் யாராலும் நெருங்கக்கூட முடியாது என்னும் அளவுக்குச் சாதனைகள் புரிந்தார். ‘கிரிக்கெட் கடவுள்’ என்று பெயர் வாங்கினார். ஆம், அவர்தான் சச்சின் டெண்டுல்கர். ஆர்வமே அவரைப் பாரதரத்னா விருதுவாங்கும்உயரத்துக்குக்கொண்டுபோனது. உங்கள் உயரங்களை ஆர்வத்தின் துணையுடன் தொடுங்கள். ●

# ஆர்வம் என்பது இதுதான்!

வேலை, தொழில், வியாபாரம், படிப்பு என்று எதுவாக இருந்தாலும், ஒரு செயலை நீங்கள் ஆர்வத்துடன் செய்கிறீர்கள் என்பதன் அர்த்தம் என்ன? அந்தச் செயலை நேசித்துச் செய்வீர்கள். அந்தச் செயலைப் பற்றி நினைத்தாலே உங்களுக்குள் பரசவம் பொங்கும். கண்கள் மின்ன அதைப் பற்றி அலுப்பில்லாமல் பேசுவீர்கள். அந்தச் செயலை எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பீர்கள். அதில் உங்களுக்குச் சோர்வே ஏற்படாது.

வேலைக்கு எவ்வளவு ஆர்வமாக வந்தீர்களோ, அதே சுறுசுறுப்புடன் வீடு திரும்புவீர்கள். அடுத்த நாள் காலையில் விழிக்கும்போதே, 'எப்போது வேலைக்குப் போகப் போகிறோம்' என்ற துடிப்பு ஏற்படும். அந்த வேலையில் எவ்வளவு சிரமங்களை எதிர்கொண்டாலும் பின்வாங்கவே மாட்டீர்கள். திரும்பத் திரும்ப முயற்சி செய்தபடி இருப்பீர்கள். உங்களுக்கு எதை நன்றாகச் செய்ய வருகிறதோ, எதைச் செய்யும்போது மகிழ்ச்சியும் நிறைவும் கிடைக்கிறதோ, அதில்தான் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது.



# ஆர்வமே காரணம்!

சிலருக்கு ஜிம்முக்குப் போய் உடலைக் கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள ஆர்வம், சிலருக்கு விதவிதமான கார்களை வாங்கி அவற்றில் பயணம் செய்வதில் ஆர்வம், சிலருக்கு ராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்வதில் ஆர்வம். ஒவ்வொருவரின் ஆர்வமும் ஒவ்வொரு விதம். ஆர்வம்என்பது ஒருவருக்குள் இயல்பாக வருவது. ஒரு செயலைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால், அதன் மீதான ஆர்வத்தைக் கற்றுக்கொள்ள முடியாது. 'இதுதான் உங்கள் ஆர்வம்' என்று கனவில் வந்து யாரும் சொல்லமாட்டார்கள்.

எவ்வளவு நெருக்கடியான நேரத்திலும் ஒரு செயலைச் செய்ய நம்மால் நேரம் ஒதுக்க முடிகிறதா, அதில் நமக்கு ஆர்வம் இருப்பதாக அர்த்தம். 'அப்புறம் செய்துகொள்ளலாம்' என்று அதைத் தள்ளிப் போடுவதில்லையா? அதைச் செய்வதற்காக எப்படிப்பட்ட பிரச்னைகளையும் எதிர்கொள்ள நாம் தயாராக இருக்கிறோமா? 'இதைச் செய்யலாமா, வேண்டாமா' என்ற தயக்கமே வருவதில்லையா? அதுதான் நம் ஆர்வத்துக்குரிய வேலை.



# அலாரம் இல்லாமலே...

ஆர்வம் இருக்கும் ஒரு வேலையைச் செய்யும்போது, அதிகாலையில் அலாரம் அடிக்காமலே நீங்கள் எழுந்து விடுவீர்கள். உங்கள் இலக்கு என்ன, செய்ய வேண்டியது என்ன என்பதெல்லாம் எங்கும் குறிப்பு எழுதி வைக்காமலே உங்களுக்கு நினைவில் இருக்கும். வீண் பொழுதுபோக்குகளில் நேரத்தை வெட்டியாகச் செலவிட்டால், உங்களுக்குக் குற்ற உணர்வு ஏற்படும். வேலைகளை நேர்த்தியாகவும், அதே நேரத்தில் வேகமாகவும் செய்வீர்கள். உங்கள் வேலை தொடர்பான அத்தனை தகவல்களும் விரல்நுனியில் உங்களிடம் இருக்கும்.

# உங்களை மாற்றும்!

அலுப்பு தட்டும் உங்கள் வாழ்க்கையைச் சுவாரசியமாக மாற்றுவது, உங்கள் ஆர்வத்துக்குரிய செயல்தான்! எதிர்மறையான சூழலிலும் உங்களுக்குள் நேர்மறை எண்ணங்களை ஏற்படுத்துவது உங்கள் ஆர்வம்தான். வேலை செய்யவே பிடிக்காத மனநிலையிலும் உங்களைக் கடினமாக உழைக்க வைப்பது உங்கள் ஆர்வம்தான். உங்களின் விருப்பப் பட்டியல், பொழுதுபோக்குகள் என்று எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிப் போடுவதும் உங்கள் ஆர்வம்தான். அது உங்களை மொத்தமாக மாற்றிவிடும்.



## அது மட்டுமே இல்லை!

‘‘ஆர்வம் என்பதை நிறைய பேர் முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை’’ என்கிறார் எழுத்தாளர் கெவின் ஹால் என்பவர். எல்லையற்ற தாகத்துடன் ஒரு வேலையைச் செய்வதும், அதை அளவுகடந்து நேசிப்பதும் மட்டுமே ஆர்வத்தின் அடிப்படை என்று நினைக்கிறோம். ஆனால், ஆர்வம் என்பது அதையும் தாண்டியது. நீங்கள் நேசிக்கும் ஒரு விஷயத்தைச் செய்வதற்காக எப்படிப்பட்ட துன்பத்தையும் தாங்கிக்கொள்ள தயாராக இருக்கிறீர்களா? அப்படியானால் நீங்கள் 100 சதவிகிதம் ஆர்வத்துடன் இருப்பதாக அர்த்தம்.

உங்களுக்கு அருணிமா சின்ஹாவைத் தெரிந்திருக்கலாம். வாலிபால் வீராங்கனை. 22 வயதில் ரயிலில் செல்லும்போது கொள்ளையர்களால் தாக்கப்பட்டு ரயிலிலிருந்து வெளியில் தூக்கி வீசப்பட்டார். அந்தச் சம்பவத்தில் அவர் தன் இரண்டு கால்களையும் இழக்க நேரிட்டது. ஆனால், அதன்பின் செயற்கைக் கால்களைப் பொருத்திக்கொண்டு எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்தார் அவர். கால்கள் நன்றாக இருப்பவர்களுக்கே எவரெஸ்ட் உச்சியைத் தொடுவது கடினமான விஷயம். ஆனால், அருணிமா எந்தச் சிரமத்தையும் பொருட்படுத்தாமல் அதைச் சாதித்தார். அதைத் தொடர்ந்து மற்ற கண்டங்களில் மிக உயரமாக இருக்கும் மூன்று மலைச்சிகரங்களையும் தொட்டார். தற்போது, மாற்றுத்திறனாளிக் குழந்தைகளுக்கு விளையாட்டில் ஆர்வம் ஏற்படுத்துவதற்காக ஒரு அகாடமி நடத்துகிறார்.

துன்பங்களைத் தாண்டி, நீங்கள் செய்யும் செயல் உங்களைப் பரவசப்படுத்துகிறதா? உங்கள் ஆர்வம் உங்களை ஜெயிக்க வைக்கும்.

## திரும்பத் திரும்ப ஒரே வேலை!

உங்கள் மனநிலை எப்படி உங்கள் வாழ்க்கையை மாற்றுகிறது? ‘The Expectation Effect: How Your Mindset Can Transform Your Life’ என்ற நூலை எழுதிய டேவிட் ராப்சன் இதுபற்றி விளக்குகிறார். எழுத்தாளர் ஆக வேண்டும் என்பது ஆறு வயதிலேயே அவருக்கு இருந்த கனவு. அப்படியே எழுத்தாளர் ஆகிப் புகழ்பெற்றார். அவருக்கு மிகவும் பிடித்தமான வேலையை அவர் செய்தார். ஆனாலும், அந்த வேலை மீது ஆர்வம் குறைந்த பல காலகட்டங்களும் அவர் வாழ்க்கையில் இருந்தன.

“நீங்கள் 25 வயதுக்குள் ஒரு வேலை அல்லது தொழிலைச் செய்ய ஆரம்பிக்கிறீர்கள். 60 வயது வரை, சிலர் ஆயுள் முழுக்க அதையே செய்ய வேண்டும். பிடித்த வேலை என்றாலும், ஒரே வேலையைத் திரும்பத் திரும்பப் பல ஆண்டுகள் தொடர்ந்து செய்வது அலுப்பு தரும். இதயம் நன்றாக இயங்குகிறதா என்பதை அறிய டிரெட்மில் சோதனை செய்வார்கள். சில நிமிடங்கள் அந்த இயந்திரத்தின் மீது ஏறி ஓட வேண்டும். ஆனால், வாழ்நாள் முழுக்க அதன் மீது ஓட முடியுமா? அதிலிருந்து குதித்து எங்காவது போய்விடலாமா என்ற எண்ணம்தான் தோன்றும். வாழ்க்கையில் ஆர்வமுள்ள ஒரு செயலைச் செய்யும்போது, அது உங்களுக்குத் தரும் நல்ல பலன்களை நினைத்துப் பாருங்கள். அந்த மனநிலை மட்டுமே உங்களை உற்சாகமாக இயக்கும்” என்கிறார் அவர்.



# உங்கள் ஆர்வத்தைப் பின்தொடருங்கள்!



தன் அமைச்சர்கள் மற்றும் படைத்தளபதிகளுடன் சேர்ந்து காட்டுக்கு வேட்டையாடப் போனார் ஒரு மன்னர். புலி, சிறுத்தை, கழுதைப்புலி போன்ற ஆபத்தான வேட்டை விலங்குகள் அதிகம் நிறைந்த காடு அது. குறுகிய மண்பாதையில் குதிரையில் செல்லும்போது அதிசயமான ஒரு காட்சியை மன்னர் பார்த்தார். காட்டில் ஒரு மரத்தில் அம்பு தைத்திருந்தது. மரத்தில் வட்டமாக வரையப்பட்டிருந்த இலக்கின் மையத்தில் கச்சிதமாக அந்த அம்பு பாய்ந்திருந்தது.

தொடர்ந்து முன்னேறிச் சென்றபோது அடுத்து இருந்த இன்னொரு பெரிய மரத்திலும் அதேபோல அம்பு பாய்ந்திருந்தது. மிகச் சரியாக இலக்கின் மையத்தில்தான் அதுவும் தைத்திருந்தது. இன்னும் போகப் போக, பல மரங்களில் அம்பு அப்படி இருந்ததைக் கண்டு திகைத்தார். "துல்லியமாக அம்பு வீசும் வீரன் ஒருவன் இந்தக் காட்டில் இருக்கிறான். அவனைக் கண்டுபிடித்து நம் படையில் முக்கியமான பொறுப்பை அவனுக்கு வழங்க வேண்டும்" என்று படைத் தளபதியிடம் அவர் சொன்னார். தளபதியும் தலையாட்டினார்.

அவனை எப்படிக் கண்டுபிடிப்பது? கொஞ்சம் தூரம் போனதும் அவர்களுக்கே விடை கிடைத்தது. 15 வயது சிறுவன் ஒருவன் கையில் வில்லுடன் நின்றிருந்தான். அவன் அருகில் இருந்த மரத்திலும் அதேபோல அம்பு தைத்திருந்தது, மிகச்சரியாக இலக்கின் மையத்தில்! 'இந்தச் சிறுவனா இப்படிக் குறிபார்த்து அம்பு எய்கிறான்?' மன்னரால் நம்பவே முடியவில்லை. ஆச்சர்யத்துடன் அவனை நெருங்கி, "எப்படி இந்த வித்தையைக் கற்றுக்கொண்டாய்?" என்று கேட்டார். "இதில் வித்தையெல்லாம் எதுவும் இல்லை. நான் முதலில் அம்பை எய்துவிட்டு, அதன்பிறகு அந்த இடத்தில் இலக்கை வரைந்துவிடுவேன்" என்றான் சிறுவன்.

தங்கள் இலக்கையும், தங்களுக்கு எதில் ஆர்வம் இருக்கிறது என்பதையும் தேடும் நிறைய பேர் இப்படித்தான் இருக்கிறார்கள். நிறைய விஷயங்களைத் தேடி அடையாமல், பல செயல்களைச் செய்து பார்க்காமல், ஏதோ ஒன்றைப் பின்பற்றுகிறார்கள். 'இதில்தான் நமக்கு ஆர்வம்' என்று முடிவு செய்துகொள்கிறார்கள். அம்பை எய்துவிட்டு, அதில் இலக்கை வரையும் சிறுவன் போன்றவர்கள் இவர்கள். கடைசி வரை இவர்கள் தங்கள் ஆர்வத்தைக் கண்டறிந்து முன்னேற முடிவதே இல்லை.

உங்களுக்குள் கனன்றுகொண்டிருக்கும் தீயை உணர்ந்து, அது வெளிச்சம் போட்டுக் காட்டும் பாதையில் பின்தொடர வேண்டும். இலக்கை அடைந்து வெற்றி பெறுவதற்கு அதுவே வழி. 'நாம் இதற்காகவே படைக்கப்பட்டிருக்கிறோம். நம் வாழ்வின் அர்த்தம் இதுதான்' என்பதை அப்போதுதான் உணர்வோம்.

அப்படி உங்கள் ஆர்வத்தைப் பின்தொடரும்போது கீழ்க்காணும் விஷயங்களை மறக்காதீர்கள்:

◆ உங்கள் ஆர்வம் என்பது சமூகத்துடன் ஒத்துப் போக வேண்டும். அரசின் சட்டங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும். மற்றவர்களுக்குத் தொந்தரவு தருவதாக இருக்கக்கூடாது. இப்போது நிறைய டீன்ஏஜ் பையன்கள் பைக் ரேஸ் பித்துப் பிடித்து அலைகிறார்கள். தேசிய நெடுஞ்சாலையில் ரேஸ் போவது போல



பைக்கை தாறுமாறான வேகத்தில் ஓட்டி விபத்துக்குள்ளான ஓர் இளைஞரைப் பற்றிச் சமீபத்தில் படித்திருப்போம். நெடுஞ்சாலை என்பது மக்கள் போக்குவரத்துக்கானது. ‘எனக்கு பைக் ரேஸில் ஆர்வம்’ என்று அங்கு சட்டவிரோதமாகப் படுவேகத்தில் வாகனம் ஓட்டுவது தவறு. ‘எனக்கு இசையில் ஆர்வம்’ என்று நள்ளிரவில் இசைப்பயிற்சி செய்து, அக்கம்பக்கத்தினரின் தூக்கத்தைக் கெடுப்பதும் தவறு.

◆ உங்கள் ஆர்வமும், மற்றவர்களின் தேவைகளும் ஒத்துப் போக வேண்டும். ‘நான் சர்வதேசத் தரத்தில் ஓவியம் வரைவேன்’ என்று பெருமையுடன் ஓவியங்களை வரைந்து ஏதோ ஒரு சிறுநகரத்தில் வைத்திருந்தால், அவை விற்பனை ஆகாது. ‘எனக்கு ஹோட்டல் பிசினஸில் ஆர்வம்’ என்று யாருமே வராத ஒரு கிராமத்தில் ஹோட்டல் கட்டினால் நஷ்டத்தில் மூழ்க வேண்டியிருக்கும். எங்கு தேவை இருக்கிறதோ, அங்குதான் உங்கள் ஆர்வத்தைச் செயல்படுத்த வேண்டும். அதாவது, நம் ஆர்வம் என்பது மற்றவர்களுக்கும் மதிப்புள்ளதாகத் தெரிய வேண்டும்.

◆ ஆர்வத்துடன் நீங்கள் செய்யும் செயல் மூலம் மற்றவர்களுக்கும் பலன் கிடைக்க வேண்டும். அப்போதுதான் அதில் அடுத்தவர்களின் உதவியும் ஆதரவும் கிடைக்கும். அப்படி ஆதரவு கிடைக்கும்போதுதான் அதில் வெற்றி சாத்தியமாகும். உதாரணமாக, தொலைதூரம் சென்று வாங்க வேண்டிய ஒரு பொருளை ஒரு சிறுநகரத்தில் ஒருவர் விற்க வந்தார் என்றால், அதை வாங்க நிறைய பேர் வருவார்கள். நியாயமான விலையில் அது தரமாகவும் கிடைத்தால், பலரும் வாங்குவார்கள். அந்தத் தொழில் வளரும்.

◆ உங்களுக்கு எதில் ஆர்வம் இருந்தாலும், அதைப் பயனுள்ள வகையில் மாற்ற வேண்டும். கம்ப்யூட்டர் புரோகிராம் மற்றும் மொபைல் ஆப்களில் இருக்கும் தவறுகளைக் கண்டுபிடிக்கத் தெரிந்த அளவுக்கு நிபுணர்கள் இருக்கிறார்கள். வெறுமனே தப்பைக் கண்டுபிடித்து, ‘யாருக்குமே தெரியாத தப்பை நான் கண்டுபிடித்தேன் தெரியுமா’ என்று பெருமை அடித்துக்கொள்வதில் பலனில்லை. சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கே தகவல் சொல்லி, அதைத் திருத்தச் செய்வதுதான் பயனுள்ள வழி. இப்படித் தவறைக் கண்டுபிடித்துச் சொல்லித் திருத்தும் நிபுணர்களுக்குப் பல நிறுவனங்கள் பெரிய அளவில் வெகுமதி அளிக்கின்றன. ஓர் ஆர்வத்தைப் பயனுள்ளதாக மாற்றுவது இப்படித்தான்.

◆ ஒரு செயலில் நாம் காட்டும் ஆர்வம் என்பது உடனடியாகவே நமக்குப் பணத்தையோ, புகழையோ சம்பாதித்துத் தரும் என்று எதிர்பார்க்கக்கூடாது. மாரத்தான் ரேஸை ஆரம்பிக்கும் எல்லோருமே முடிவுக்கோடு வரை ஓட முடிவதில்லை. ஆர்வம் உள்ளவர்கள் மட்டுமே ஓடி முடிக்கிறார்கள். உங்களைப் போலவே ஒரு செயலைச் செய்ய ஆரம்பிக்கும் பலரும் ஒரு கட்டத்தில் சோர்ந்து போய் விலகக்கூடும். அப்படி இல்லாமல் உங்களைத் தொடர்ச்சியாக இயங்கச் செய்வது உங்கள் ஆர்வம்தான். ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும், ‘இந்தக் காலகட்டத்துக்குள் சாதிக்க வேண்டும்’ என்று இலக்கு வைத்து முன்னேறுங்கள்.

◆ தோல்வியோ, நெருக்கடியோ, பிரச்னையோ ஏற்படும்போது பலரும் பின்வாங்கி விடுகிறார்கள். அப்படி இல்லாமல் மீண்டும் முன்னேறிச் செல்லும் சக்தியை நம் ஆர்வமே நமக்கு வழங்குகிறது. ‘இதை என்னால் செய்ய முடியாது’ என்று நினைத்து சோம்பலுடன் படுத்திருப்பதற்கும், ‘இவ்வளவு முயற்சி செய்தும் இது நடக்கவில்லையே, இதை வேறு எப்படிச் செய்யலாம்’ என்று யோசித்தபடி களைப்பில் படுத்திருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. அந்த வித்தியாசத்தை ஆர்வமே ஒருவருக்குக் கொடுக்கும். ●

# தினம் தினம் சொல்லுங்கள்!

‘அம்பாசமுத்திரம் அம்பானி’ படத்தில் கதாநாயகன் கருணாஸ், “நான் அம்பானி ஆவேன்” என்று தினம் தினம் சொல்லிக்கொண்டே இருப்பார். இது நகைச்சுவைக் காட்சி அல்ல! திரும்பத் திரும்பச் சொல்வதன் மூலம் அந்த மந்திரச்சொல் மனத்தை வழிநடத்துகிறது. டான் சுல்லிவன் என்ற மேனேஜ்மென்ட் குரு இதை 30 ஆண்டுகளாகச் செய்துவருகிறார். ஒவ்வொரு நாளின் காலையிலும், அன்று அவர் அடைய வேண்டிய இலக்கு ஒன்றை எழுதிப் பார்ப்பார். அதை மனத்தில் பதிய வைத்துக்கொண்டு அன்றைய வேலைகளைச் செய்வார். “நம் உடல் தசைகள் வலிமை அடைவதற்காகத் தினம் தினம் உடற்பயிற்சி செய்கிறோம். அதேபோல மனம் வலிமை பெற இப்படிச் செய்ய வேண்டும். தினம் தினம் இதைச் செய்யும்போது, நாம் ஆர்வமாகச் செய்யும் ஒரு செயலில் ஜெயிக்கலாம்” என்கிறார் அவர்.



# அடையாளம் காண்பது எப்படி?

உங்களுக்கு எதில் அதிக ஆர்வம் என்று அடையாளம் காண்பது எப்படி? வெறுமனே உட்கார்ந்து ஒவ்வொரு செயலைப் பற்றியும் யோசித்தால் எந்த முடிவுக்கும் வர முடியாது. உங்களால் செய்ய முடிந்த பல விஷயங்களைச் செய்து பாருங்கள். சில செயல்களைச் செய்வது பரவசம் தரும், சிலவற்றைச் செய்யக் கஷ்டமாக இருக்கும், சிலவற்றைச் செய்வது வேடிக்கையாக இருக்கும்.

சில செயல்களில் உடல் களைத்துப் போயிருக்கும், சில செயல்களில் மனம் சோர்ந்து போயிருக்கும், சில செயல்களின்போது ‘இதெல்லாம் ஒரு வேலையா’ என்று தகுதிக்குறைவாக யோசித்து இருப்பீர்கள். இவற்றைத் தாண்டி எத்தனை மணி நேரம் செய்தாலும் அலுக்காத, இன்னும் செய்யலாம் என்ற உணர்வைத் தந்தது எது என்று பாருங்கள். அந்தக் குறிப்பிட்ட செயலை மற்றவர்களைவிடச் சிறப்பாக நீங்கள் செய்வீர்கள். அதில்தான் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது.





# எப்போதும் இல்லை!

ஒருவர் சுற்றுலா செல்வதற்கு ஆயத்தமானார். ஐந்து நாட்களுக்குத் தேவையான உடைகளை எடுக்கும்போது அவருக்கு ஒரு யோசனை வந்தது. துணி அலமாரியில் அடிப்பக்கத்தில் ஒரு சட்டை இருந்தது. அவர் வழக்கமாக

## சரியான முடிவு!

வாழ்வில் நாம் நான்கு கட்டங்களைக் கடந்து வருகிறோம். இந்த எல்லாக் கட்டங்களிலும் ஆர்வமே நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்கிறது.

- சிலருக்கு ஆரம்பத்திலேயே ஒருவித நிறைவு வந்துவிடுகிறது. 'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து' என்ற பொன்மொழியை அடிக்கடிச் சொல்லிக்கொள்வார்கள். இதைத் தாண்டி எதையாவது அடைய முயன்றால் அதற்குப் போராட வேண்டியிருக்குமே என்ற பயமே இதற்குக் காரணம். ஆனால், இந்த நிறைவான நிலை சீக்கிரமே அலுத்துவிடும். 'இன்னும் பெரிதாக முயற்சி செய்' என்று மனம் அவர்களைத் தொந்தரவு செய்தபடி இருக்கும்.
- 'வாழ்வில் எதையாவது சாதிக்க வேண்டும்' என்று அடுத்த கட்டத்துக்குப் போவோம். பரபரப்பாக உழைப்பது நமக்கு மகிழ்ச்சி தரும். மற்றவர்களின் பாராட்டு கிடைக்கும். எதையோ சாதித்த உணர்வு கிடைக்கும்.
- இதற்குப் பிறகு பலர் தப்பு செய்ய ஆரம்பிப்பார்கள். மகிழ்ச்சியும் பாராட்டும் கிடைக்கிறது என்பதற்காக, பேராசையில் எல்லா வேலைகளையும் செய்ய ஆரம்பிப்பார்கள். நமக்குப் பிடித்திருக்கிறது என்பதற்காக ஐந்து பிளேட் பிரியாணியை ஒரேயடியாகச் சாப்பிட முடியாது அல்லவா? அது ருசியான, நமக்குப் பிடித்தமான உணவுதான். ஆனால், பசி அடங்கியதும் வயிறு நிராகரிக்கும். வேலைகளும் இப்படித்தான். எல்லாவற்றையும் செய்ய நினைத்தால், சோர்ந்து போய் எதையுமே செய்யாமல் விடுவோம்.
- நான்காவது கட்டம் முக்கியமானது. எல்லா வேலைகளையும் செய்வது தவறு என்று உணர்ந்து, நமக்குப் பிடித்த முக்கியமான ஒன்றை மட்டுமே செய்வது என்ற சரியான முடிவை எடுப்போம். ஆர்வமுள்ள செயல் என்பதால் அதைச் சிறப்பாகச் செய்து வெற்றி பெறுவோம். அதுவே நம் அடையாளமாக மாறி நம்மை உயர்த்தும்.

## கட்டம் கட்டமாக திட்டம் தீட்டுங்கள்!

வேலைவாய்ப்புக்கான இன்டர்வியூக்களில் தவறாமல் கேட்கப்படும் ஒரு கேள்வி... 'இன்னும் ஐந்து ஆண்டுகள் கழித்து நீங்கள் என்னவாக இருக்க விரும்புகிறீர்கள்?' ஒருவருக்குத் தன்னுடைய வளர்ச்சியிலும், நிறுவனத்தின் வளர்ச்சியிலும் ஆர்வம் இருக்கிறதா என்பதைக் கண்டறிவதற்கான கேள்வி இது. அதே கேள்வியை ஒவ்வொருவரும் தங்களுக்குள் இப்படி மாற்றிக் கேட்டுக்கொள்ளலாம். 'வாழ்க்கையில் நம் எதிர்பார்ப்பு என்ன? இன்னும் ஐந்து ஆண்டுகளில் நாம் எங்கு இருப்போம்? அடுத்த 10 ஆண்டுகளில், 20 ஆண்டுகளில், 30 ஆண்டுகளில் நாம் இருக்க வேண்டிய இடம் எது?'

இப்படி வாழ்வின் ஒவ்வொரு கட்டத்துக்குமான இலக்கைத் தீர்மானியுங்கள். அதன்பின், அதையெல்லாம் அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று தனித்தனியாகப் பிரித்து திட்டம் தீட்டுங்கள். அனுபவசாலிகளின் யோசனைகளைக் கேளுங்கள். ஆர்வத்துடன் களத்தில் இறங்குங்கள். உங்களால் முடியும்!

அந்த வண்ணத்தில் உடுத்துவதில்லை. உறவினர் ஒருவர் அன்பளிப்பாகக் கொடுத்ததை அணியாமலே வைத்திருந்தார். 'சுற்றுலா செல்லும் இடத்தில் நமக்கு இதை அணிய விருப்பம் வரலாம். அங்கு போட்டுப் பார்க்கலாம்' என்று அதையும் எடுத்துக்கொண்டார். ஆனால், சுற்றுலாவில் மகிழ்ந்த ஐந்து நாட்களுமே அதை அணியவில்லை. மடிப்புக் கலையாமல் எடுத்துவந்து மீண்டும் பீரோவில் வைத்தார்.

ஒரு சட்டையைச் சொந்த ஊரில் அணிய விரும்பவில்லை என்றால், அதை எங்குமே அணிய தனக்கு விருப்பம் இருக்காது என்பதை அப்போது அவர் புரிந்துகொண்டார். வேலைகளிலும் இப்படித்தான். ஒரு செயலை இப்போது செய்யப் பிடிக்கவில்லை என்றால், பிற்காலத்தில் எப்போதாவது செய்துகொள்ளலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். வேலை என்பது ஆர்வம் சார்ந்தது. இப்போது செய்ய ஆர்வமில்லாத ஒரு வேலையை எப்போதும் நீங்கள் செய்ய மாட்டீர்கள். அதைப்பற்றி யோசித்து நேரத்தை வீணடிக்காதீர்கள்.



# செடி வளர்ப்பது போல ஆர்வத்தை வளருங்கள்!

தன் நண்பரின் பண்ணை வீட்டுக்குப் போயிருந்தார் ஒருவர். அந்தப் பண்ணை வீட்டின் ஒரு பகுதியில் நர்சரி வைத்து விதவிதமான செடிகளை வளர்த்திருந்தார் நண்பர். மிகவும் அரிதான மரக்கன்றுகள், பூச்செடிகள், கொடி வகைகள் என்று ஒவ்வொன்றையும் பார்க்க கண்ணுக்கு விருந்தாக இருந்தது.

அவற்றைப் பார்த்துக்கொண்டே வந்தவர் ஓர் இடத்தில் திகைத்து நின்றுவிட்டார். வானவில்லின் அத்தனை வண்ணங்களையும் கலந்தது போன்ற அழகிய பூக்களால் பூத்துக் குலுங்கியது ஒரு செடி. அதுபோன்ற பூவை அவர் வாழ்நாளில் பார்த்ததில்லை. அந்தப் பூவின் வாசமும் அவரைக் கவர்ந்தது. வண்ணத்துப்பூச்சிகள் அந்தப் பூவைச் சுற்றிச் சுற்றி வந்தன. தங்களைப் போன்ற ஒரு வண்ணத்துப்பூச்சியாக அதை அவை நினைத்திருக்கலாம் என்று அவருக்குத் தோன்றியது.

“என்ன பூ இது? வித்தியாசமாக இருக்கிறதே” என்று நண்பரிடம் கேட்டார். அந்தப் பூச்செடியின் பெயரை விவரித்த பண்ணை உரிமையாளர், “போன மாதம் காஷ்மீர் போயிருந்தபோது வாங்கி வந்தேன். நம் ஊர் சூழலுக்கு வளருமா என்று தயக்கமாக இருந்தது. ஆனாலும் நன்றாக வளர்ந்து பூத்திருக்கிறது” என்றார். அந்தச் செடியை நெருங்கிவந்து பார்த்த நண்பர் நொந்து போய்விட்டார். பாதியாக உடைந்த பழைய பிளாஸ்டிக் வாளி ஒன்றில் மண்ணைக் கொட்டி அதில் அந்தச் செடியை நட்டு வைத்திருந்தார் பண்ணை உரிமையாளர்.

“என்ன இது? உலகிலேயே அழகான பூக்களைப் பூக்கும் செடியை இப்படி நட்டு வைத்திருக்கிறாய்? என்னிடம் இது கிடைத்திருந்தால், விலையுயர்ந்த பூத்தொட்டியில் நட்டு அழகு பார்த்திருப்பேன்” என்றார் நண்பர். பண்ணை உரிமையாளர் சிரித்தபடி, “அதை வாங்கிவந்தபோது என்னிடம் பூத்தொட்டி எதுவும் இல்லை. அவசரத்துக்கு இதில் நட்டு வைத்தேன். எந்த இடத்தில் நட்டிருக்கிறோம் என்றெல்லாம் செடி பார்ப்பதில்லை. பழைய வாளியில் நடுவதை அவமானமாகவும் கருதுவதில்லை. எங்கிருந்தாலும் அதன் இயல்பு, அழகாகப் பூப்பதுதான்” என்றார்.

ஆழமான கருத்து இது. ஒருவர் ஏதோ ஒரு வேலையில் ஆர்வத்தை வளர்த்துக்கொள்வதும், தோட்டம் வைத்து செடி வளர்ப்பது போன்றதுதான். தோட்டக்கலையில் ஈடுபாடு உள்ளவர்களுக்கு இது எளிதில் புரியும். படிப்படியாக அதைச் செய்வதை அறிந்துகொள்வோம்:

❖ தேடலுடன் ஆரம்பிக்க வேண்டும். தோட்டம் வைப்பது எப்படி, அழகான தோட்டங்கள் எங்கெலாம் இருக்கின்றன, பல்வேறு செடிகள் மற்றும் மரங்களின் தன்மைகள் என்ன, அவை எப்படி வளரும், நம் தோட்டத்துக்கு ஏற்றவை எவை, நம் ஊர் சூழலில் அவை வளருமா என்றெல்லாம் முதலில் அறிந்துகொள்ள வேண்டும். ஒரு வேலை அல்லது தொழிலுக்கும் இப்படி அடிப்படை அறிவு தேவை.

❖ நமக்கும், நாம் உருவாக்கும் தோட்டத்துக்கும் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். பசுமை பிடிக்கும், இயற்கை பிடிக்கும், வெளியில் நேரம் செலவிடப் பிடிக்கும், எங்கள் குடும்பத்துக்கே இதில் ஆர்வம் இருக்கிறது, தோட்டத்தைப் பயனுள்ள வகையில் உருவாக்குவது நல்லது என்று பல காரணங்கள் இந்த நெருக்கத்தை ஏற்படுத்தும். ஒரு செயலிலும் இப்படி அந்தரங்கத் தொடர்பு அவசியம்.

❖ ஆரம்பத்திலேயே அகலக்கால் வைக்காமல் சிறிதாகத் தொடங்குங்கள். குறைந்த பராமரிப்பில் நன்றாக வளர்கிற, விரைவிலேயே பூக்கிற, நன்கு காய்க்கிற செடிகளைக் கொஞ்சமாக வளருங்கள். அவை நம்பிக்கையையும் அனுபவத்தையும் கொடுக்கும். பிறகு தோட்டத்தை விரிவுபடுத்துங்கள். வேலை அல்லது தொழிலும் இப்படித்தான் ஆரம்பத்தில் இருக்க வேண்டும்.

❖ எட்ட முடிகிற இலக்குகளை வையுங்கள். சிறிய காய்கறி தோட்டத்தை வைத்து நம் வீட்டுக்குக் காய்கறி விளைவிக்க வேண்டும், நம் பூஜையறைக்குப் பூக்கள் வேண்டும், தோட்டத்து தண்ணீரை வீணடிக்காதபடி செடிகள் வைக்க வேண்டும்... இப்படி இலக்கு வையுங்கள். விரைவில் சாதித்துப் பெருமிதம் அடைவீர்கள். அதன்பின் பெரிய இலக்குகளைத் தேடிப் போகலாம். வேலை அல்லது தொழிலும் இப்படி இலக்கைப் பிரித்துக்கொள்ளுங்கள்.

❖ புத்தகங்கள் படிப்பது, வீடியோக்கள் பார்ப்பது, மற்றவர்களின் அனுபவங்களைக் கேட்பது என்று தோட்டக்கலை பற்றி நன்கு கற்றுக்கொள்ளுங்கள். இப்படி கற்றுக்கொண்ட நுட்பங்களை உங்கள் தோட்டத்தில் செய்து பாருங்கள். புதிய விஷயங்களைச் செய்யும்போது சுவாரசியம் பிறக்கும். வேலையிலும் இப்படிப் பரிசோதனை முயற்சிகள் செய்யுங்கள்.

❖ மண் வாசனை, ஒரு விதையிலிருந்து துளிர் வருவது, மொட்டு ஒன்று மெல்ல மெல்ல மலர்வது, கத்தரிக்காய் ஒன்று பிஞ்சுவிட்டு பெரிதாக வளர்வது என்று தினம் தினம் நடக்கும் முன்னேற்றங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள். இந்த அனுபவங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களின் ஆலோசனைகளையும் கேளுங்கள். இது உங்களை உற்சாகப்படுத்தும். வேலை மற்றும் தொழிலிலும் இந்த அனுபவப் பகிர்வு அவசியம்.

❖ எந்த ஒரு விஷயத்தைப் புதிதாகச் செய்ய ஆரம்பித்தாலும், அதில் தொடர்ச்சி முக்கியம். தினம் தினம் செயல்பட்டுக்கொண்டே இருக்க வேண்டும். தோட்டத்தில் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது, வேரில் மண் அணைத்துவிடுவது, களைச்செடிகளை அப்புறப்படுத்துவது, பூச்சிகள் தாக்கியிருக்கிறதா என்று கண்காணிப்பது, பூக்களும் காய்கறிகளும் பறிப்பது என்று சில நிமிடங்களாவது அங்கு செலவிட வேண்டும். சில செடிகள் வாடிப் போகலாம், சில பூக்காமல் ஏமாற்றலாம், மனம் தளரக்கூடாது. பிடுங்கிப் போட்டுவிட்டு புதிய செடிகளை நட்டுப் பராமரிக்க வேண்டும். வேலை அல்லது தொழிலிலும் இப்படி எதிர்பாராத பிரச்னைகள் ஏற்படும்போது மாற்றுத் திட்டங்களுடன் தயாராக இருக்க வேண்டும்.

படிப்படியாக இப்படிச் செய்வதன் மூலம் உங்களுக்குள் ஊற்றெடுக்கும் ஆர்வம், வாழ்நாள் முழுக்க உங்களை வளர்க்கும். ●


வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 8 இதழ் 6

டிசம்பர் 2023

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com



இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.



Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

# ஆர்வக்கோளாறு கதைகள்!

**ஒ**ரு சிறுவன் வெளியில் சென்று விளையாடாமல் பல மணி நேரம் டி.வி பார்த்துக்கொண்டும், கம்ப்யூட்டரில் விளையாடிக்கொண்டும் இருந்தான். அப்பா அவனுக்குப் புத்திமதி சொல்வதற்காக, “உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? ஒரு ஒலிம்பிக் வீரர் தினமும் பயிற்சி எடுக்கும் நேரத்தைவிட அதிக நேரம் நாமெல்லாம் உட்கார்ந்தபடியே டி.வி பார்க்கிறோம்” என்றார்.

மகன் உடனே ஆர்வக்கோளாறுடன் கேட்டான், ‘‘கரெக்ட்பா! அவங்க விளையாடறதை நாம டி.வி–யில பார்க்காம விட்டா, அப்புறம் அவங்க பயிற்சி எடுத்து என்ன பயன்? அதனால்தான் டி.வி பார்க்கிறோம்” என்றான். அப்பா திகைத்துவிட்டார்.

**“எ**ன் ப்ராக்ரஸ் ரிப்போர்ட்ல கையெழுத்து போடுங்கப்பா’’ என்று மகள் வர, அதை வாங்கிப் பார்த்தார் அப்பா. எல்லாப் பாடங்களிலும் குறைந்த மார்க் எடுத்து பாஸ் செய்திருந்தாள் மகள். ‘‘நான் ஏன் கையெழுத்து போடணும்?’’ என்று அப்பா கேட்க, ஆர்வக்கோளாறுடன் மகள் சொன்னாள்.

“நான் சரியா படிக்கலைன்னு பயந்து எந்த எக்ஸாமுக்கும் லீவ் போடலை. யாரையும் பார்த்து காப்பி அடிக்கலை. நேர்மையா எழுதி பாஸ் பண்ணியிருக்கேன். அதனால கையெழுத்து போடுங்கப்பா!”

**“இ**ரவில் சரியாகத் தூக்கம் வருவதில்லை, நீண்ட நேரம் புரண்டு புரண்டு படுத்தபடி பல கவலைகளை நினைத்துத் தவிக்கிறேன்’’ என்று டாக்டரிடம் சிகிச்சைக்குப் போனார் ஒருவர். ‘‘கண்களை மூடிக்கொண்டு இனிமையான இடம் ஒன்றில் இருப்பதாகக் கற்பனை செய்தபடி படுத்திருங்கள். கொஞ்ச நேரத்தில் நல்ல தூக்கம் வரும்” என்று யோசனை சொன்னார் டாக்டர். வீட்டுக்கு வந்து தன் மனைவியிடம் இதைச் சொன்னார் அவர்.

இரவு அவர் படுத்ததும் மனைவி அருகில் வந்து, “இங்க பாருங்க, அழகான ஒரு தீவுல நாம இருக்கோம். கடற்கரை ஓரத்துல அழகான பங்களா. கடல்ல அலை அடிக்கற சத்தம் லேசா கேட்குது. ஜிலுஜிலுன்னு கடல் காற்று ஜன்னல் வழியா வருது. தோட்டத்துல பூத்திருக்கற பூக்களோட வாசனை கிறங்க வைக்குது. இந்தச் சூழல்ல படுத்திருக்கறதா கற்பனை செய்யுங்க, தூக்கம் வரும்” என்றார். அந்த ஆர்வக்கோளாறு கணவர் கவலையுடன் கேட்டார். “அந்த இடத்துக்கு ரூம் வாடகை நாம எவ்வளவு தர வேண்டி இருக்கும்?”

மருத்துவமனைக்கு ரத்தப் பரிசோதனைக்காக வந்த இளம்பெண் ஒருவர், "என் கையில் ரத்த நாளத்தைச் சரியா கண்டுபிடிச்சு ஊசி குத்தறது கஷ்டமா இருக்கும். கொஞ்சம் கவனமா செய்யுங்க" என்று கவலையுடன் சொன்னார். அங்கிருந்த ஆர்வக்கோளாறு நர்ஸ் உடனே, "கவலைப்படாதீங்க, போன வாரம் டெங்கு டெஸ்ட்டுக்காக ஒரு பெண் வந்தாங்க. அவங்க கை இதேமாதிரிதான் மோசமா இருந்தது. நாலு இடத்துல குத்திப் பார்த்து கடைசியில டெஸ்ட் எடுத்துட்டேன்" என்றார்.

வந்த இளம்பெண் அமைதியாக, "அது நான்தான். இந்த வாரமும் டாக்டர் டெங்கு டெஸ்ட் எடுக்கச் சொன்னாரு. இப்போதாவது நாலு இடத்துல குத்தாம, ஒரே இடத்துல எடுங்க" என்றார்.

புதிதாக ஓர் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்த ஒருவர், தினமும் தாமதமாக வருவதையே வழக்கமாக வைத்திருந்தார். ஒரு வாரம் வரை பொறுத்துப் பார்த்துவிட்டு சூப்பர்வைஸர் அவரை அழைத்தார். நாசூக்காக அவரின் தாமதத்தை உணர்த்தினார். "ஆபீஸில் உங்கள் சீட் கடைசியில் இருக்கிறது. வாசலில் நுழைந்து உங்கள் சீட்டுக்குப் போய் உட்காரும் வரை வழியில் இருக்கும் அத்தனை பேரும் சரியாக 10 மணிக்குள் வந்துவிடுகிறார்கள். நீங்கள் லேட்டாக வருவதைக் கவனிக்கிறார்கள்" என்றார்.

அந்த ஆர்வக்கோளாறு ஊழியர் உடனே கேட்டார். "சாரி சார்! இப்படி நடக்காமத் தடுக்க ஒரு ஐடியா இருக்கு. பின்பக்க வாசல் வழியா நான் நைஸா வந்து என் சீட்ல உட்கார்ந்துக்கட்டுமா?"

துணிக்கடைக்குப் போன ஒரு பெண், ட்ரையல் ரூமில் நுழைந்து ஒவ்வொரு உடையாக அணிந்து பார்த்துக்கொண்டிருந்தார். அவர் ஒவ்வொரு உடையை மாற்றிக்கொண்டு வெளியில் வந்து காட்டும்போதும் அவரின் ஐந்து வயதுக் குழந்தையான மகள் ஆச்சர்யத்துடன் பார்த்து, "மம்மி! இந்த டிரஸ்ல நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க" என்று உற்சாகத்துடன் சொல்லிக்கொண்டே இருந்தாள்.

அதே கடையில் உடைகளைத் தேர்வு செய்த இன்னொரு ஆர்வக்கோளாறு பெண் வந்து, "நானும் ஒரு மணி நேரமா தேடறேன். பொருத்தமா டிரஸ் எதுவும் அமையல. உங்க மகளை ஐந்து நிமிஷம் எனக்குக் கடனா கொடுங்க. அவள் பார்த்து ஆச்சர்யப்பட்டா, ஒருவேளை எனக்கு டிரஸ் பிடிக்குமோ என்னவோ!" என்றார். குழந்தை திகைத்தது.

வீட்டில் போன் ஒலித்ததும் எடுத்தார் அந்த நடுத்தர வயதுப் பெண்மணி. எதிர்முனையில் ஓர் இளம்பெண் படபடவெனப் பேசினார். "அம்மா, காலேஜ் முடிச்சு வீட்டுக்குக் கிளம்பும்போது வண்டி ரிப்பேர் ஆகிடுச்சு. அதை சர்வீஸுக்கு விட்டுட்டு சினிமா பார்க்க வந்துட்டேன். வீட்டுக்கு 10 மணிக்குதான் வருவேன். அப்பாகிட்ட ஏதாவது சொல்லிச் சமாளிச்சிடு" என்றாள்.

அந்தப் பெண்மணிக்கு இரண்டு மகன்கள் மட்டும்தான் இருக்கிறார்கள். மகள் கிடையாது. இளம்பெண் தவறுதலாக ராங் நம்பர் டயல் செய்திருக்கிறாள் என்பது புரிந்தது. "பாரும்மா! நீ என் பொண்ணே கிடையாது" என்று விளக்க முயன்றார். ஆர்வக்கோளாறு இளம்பெண்ணோ, "என்னம்மா இது, ஒருநாள் லேட்டா வந்தா நான் உன் பொண்ணே கிடையாதுன்னு ஆகிடுமா? அப்பாகிட்ட எதையாவது சொல்லிச் சமாளி" என்று கத்தியபடி போனை வைத்துவிட்டாள். அந்தப் பெண்மணி திகைப்புடன் போனையே பார்த்துக்கொண்டிருந்தார்.

# ஆர்வத்துடன் இறங்குங்கள்!

தங்கள் வாழ்க்கைக்கான வாய்ப்பாகத் தொழில் அல்லது வியாபாரத்தில் இறங்கும் பலர் ஒரு விஷயத்தில் தப்புக்கணக்குப் போடுகிறார்கள். பணம் சம்பாதிக்கச் சுலபமான மற்றும் வசதியான வாய்ப்பாக அவர்கள் தொழிலையும் வியாபாரத்தையும் நினைக்கிறார்கள். வியாபாரம் செய்யும் மற்றவர்களும் இப்படி சம்பாதிப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். உட்கார்ந்த இடத்தில் பணம் பண்ண முடியும் என்று கருதுகிறார்கள்.


அவர்களிடம் ஆர்வம் இருப்பதில்லை. தொழில் அல்லது வியாபாரம் குறித்த தெளிவும் அவர்களிடம் கிடையாது. கடைவீதியில் என்ன கடையில் கூட்டம் அதிகம் கூடுகிறது என்று பார்த்து அதே வியாபாரத்தை அவர்களும் ஆரம்பிக்கிறார்கள். பத்தோடு பதினொன்றாக அவர்களின் வியாபாரம் இருக்கிறது. தொழிலிலும் இப்படி கண்மூடித்தனமாக இறங்குகிறார்கள். அந்தத் தொழில் குறித்த அறிவோ, அனுபவமோ, அதன் மீது ஆர்வமோ இல்லாமல் நீண்ட காலம் அதை நடத்த முடியாது. வாடிக்கையாளர்களை ஈர்க்க முடியாது. ஒரு பிரச்னை ஏற்படும்போது தடுமாறி விடுவார்கள்.



**ஆர்வத்துடன் தொழில் அல்லது வியாபாரத்தில் இறங்கி வளர்ச்சி அடைவதற்குச் சில வழிகள்:**

- இதுவரை யாருமே செய்து பார்க்காத புதுமையான தொழில் அல்லது வியாபாரத்தை நீங்கள் தொடங்கினாலும், உங்களுக்கு ஆர்வம் இருந்தால் தொலைநோக்குப் பார்வையுடன் அதைச் செய்வீர்கள்.
- ஆர்வம் இருப்பவர்களுக்கே, தங்களின் வாடிக்கையாளர்கள் யார் என்பதைத் தெளிவாக உணர்ந்து ஈர்க்கத் தெரியும்.
- உங்களின் தொழில் அல்லது வியாபாரம் எவ்வளவு சிறியதாக இருந்தாலும், ஆர்வம் இருந்தால் நல்ல பெயர் வாங்கி உங்களை ஒரு சிறந்த பிராண்டாக வளர்ப்பீர்கள்.
- தொழிலில் எதிர்காலம் எப்படி இருக்கும் என்ற நிச்சயமற்ற நிலை ஏற்பட்டாலும், தெளிவான திட்டங்களுடன் முன்னேற வழி தேடுவீர்கள்.
- ஆர்வம் இருப்பவர்கள்தான் தங்கள் தொழிலுக்கு வலுவான அடித்தளம் அமைப்பார்கள்.
- ஒரு தொழிலை ஏன் செய்கிறோம், அதில் என்ன எதிர்பார்க்கிறோம் என்ற தெளிவு இருந்தால் ஆர்வம் வரும். அதுவே தன்னம்பிக்கை மற்றும் ஈடுபாட்டுடன் தொழில் செய்ய வைக்கும்.
- ஆர்வம் இருப்பவர்களே தங்கள் தொழிலில் நிபுணர் ஆகிறார்கள். சரியான மனிதர்களுடன் பழகி அதன் நுணுக்கங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். தேவையான உதவிகளையும் பெறுகிறார்கள்.
- தொழிலில் எத்தனை போட்டியாளர்கள் இருந்தாலும், அவர்களைத் தாண்டி தனித்துத் தெரிய ஆர்வமே காரணமாக இருக்கும்.
- ஆர்வம்இருப்பவர்களேதங்கள்தொழில் அல்லது வியாபாரத்தைத் தங்களின் அடையாளமாக மாற்றிக்கொள்கிறார்கள். அதன்மூலம் வளர்ச்சி காண்கிறார்கள்.

ஒரு தொழிலதிபராகவோ, வியாபாரியாகவோ வெற்றிகரமாக உருவெடுக்க வேண்டும் என்றால், உங்கள் தொழில் பயணத்தின் அர்த்தம் என்ன என்பதை உணருங்கள். அதில் உங்களுக்கு இருக்கும் ஆர்வம் எவ்வளவு என்று அளவிடுங்கள். பிரச்னைகள், போராட்டங்களுக்கு உங்கள் அனுபவத்தால் தீர்வு தேடி ஜெயிக்க முடியும். ●


RAMRAJ
LittleStars®
KIDS DHOTIS & SHIRTS
LET THE LITTLE ONES SHINE IN THE TRENDING TRADITION.



Steal the
Spotlight
with Style
Culture India™
TRADITIONAL KURTA DHOTI
RAMRAJ
SCAN QR CODE FOR
STORE LOCATION
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in


RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS • SHIRTS
DISCOVER THE
POWER
OF A PERFECT DHOTIS & SHIRTS FOR YOUR
STYLE STATEMENT



# SHIRT CRAFTED FOR ALL SEASON

EMBRACE THE BREEZY HAPPINESS THIS FESTIVE SEASON WITH WHITE AND COLOUR LINEN PARK FABRIC , SHIRTS & TROUSERS

**Available in 50+ Colours as plain and printed.**

LINEN PARK®

SHIRTS • TROUSERS • FABRICS

By

RAMRAJ©



Available at Company Showrooms & All leading Textile Shops

உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**



## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை

**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.



## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை

**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

ஒரு வருட சந்தா: ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | 2 வருட சந்தா: ரூ.~~380~~ ரூ.250 மட்டும்.

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**

- வாழ்க்கை நமக்கு 10 சதவிகித வாய்ப்புகளையே தருகிறது. அவற்றை எப்படி ஆர்வத்துடன் பயன்படுத்துகிறோம் என்பதில்தான் மிச்ச 90 சதவிகித வெற்றி இருக்கிறது.
- வாழ்க்கையில் எது நடந்தாலும், அதை நாம் எப்படிப்பட்ட ஆர்வத்துடன் எதிர்கொள்கிறோம் என்பதைப் பொறுத்ததே முன்னேற்றம் கிடைக்கும்.
- ஆர்வமாக இருந்தால் அற்புதங்கள் நடக்கும். மகிழ்ச்சியாக இருந்தால் மகத்தான விஷயங்கள் நடக்கும். சோகமாக இருந்தால் எல்லாம் தப்பாக நடக்கும். நாம் மாறுவதைப் பொறுத்தே வாழ்க்கையும் மாறும்.
- ஆர்வத்துடன் மூன்று விஷயங்களைப் பின்பற்றுங்கள். பணம் சம்பாதிக்க ஒன்று, வளர்ச்சிக்கு ஒன்று, மகிழ்ச்சிக்கு ஒன்று.
- நீங்கள் சாதிக்க நினைக்கும் ஒரு விஷயத்தை எந்தச் சூழலிலும் கைவிடாதீர்கள். முயற்சியும் ஆர்வமும் இருந்தால், எதுவும் தப்பாக நடக்காது.
- ஆர்வம் உங்களை வழிநடத்தினால், ஏதேனும் ஒரு காரணம் உங்களைப் பின்வாங்காமல் பார்த்துக்கொள்ளட்டும்.
- இந்த உலகில் மிகப்பெரிய சாதனைகள் எல்லாமே, ஆர்வத்துடன் சில தனிமனிதர்கள் உழைத்து நிகழ்த்தியவைதான்.
- எவ்வளவு ஆர்வம் இருந்தாலும், 'இதை நம்மால் செய்ய முடியுமா' என்ற சந்தேகம் எழுந்தால் எதையும் சாதிக்க முடியாது.
- உங்கள் ஆர்வத்தை நீங்கள் பின்தொடர்ந்தால், வெற்றி உங்களைப் பின்தொடரும்.
- ஆர்வத்துடன் செயலில் இறங்குபவர்கள்தான், சாத்தியமில்லை என்று நினைக்கப்படும் எல்லாவற்றையும் சாதிக்கிறார்கள்.
- ஆர்வம் இல்லாமல் உங்களிடம் செயல்படுவதற்குச் சக்தி இருக்காது. சக்தி இல்லாவிட்டால் எதுவும் நடக்காது.
- ஒருவரை பலவீனங்கள், தோல்விகள் போன்ற தடைக்கற்களைத் தாண்டி சாதிக்க வைப்பது அவரது ஆர்வம் மட்டுமே!
- நீங்கள் செய்யும் ஒரு வேலையை நேசிக்காவிட்டால், அந்த வேலையை முழுமனசாகவோ, ஆர்வத்துடனோ உங்களால் செய்யவே முடியாது.
- உங்கள் திறமைக்கு ஏற்ற ஒரு உயரத்தை அடையாமல், 'இதுவே போதும்' என்று சின்ன விஷயங்களில் திருப்தி அடைந்தால், உங்களுக்குள் ஆர்வம் பொங்கவில்லை என்று அர்த்தம்.
- செய்யும் வேலை தொடர்பான உங்கள் பயத்தையும் சந்தேகத்தையும்விட, உங்களின் ஆர்வமும் திறமையும் அதிகமாக இருந்தால் நிச்சயம் ஜெயிப்பீர்கள்.
- 'இதுதான் என் வாழ்வின் அர்த்தம்' என்று நீங்கள் உணர்ந்திருந்தால், உங்களை யாரும் ஊக்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை. ஆர்வமே உங்களை வழிநடத்தும்.
- விருப்பமே இல்லாமல் ஒரு வேலையைச் செய்தால் மன அழுத்தம்தான் வரும். ஆர்வத்துடன் அதையே செய்தால் வெற்றி வரும்.
- உங்களுக்கு எதில் ஆர்வம் இருக்கிறது என்று அறிந்துகொள்ளுங்கள். அதைப் பின்பற்றுங்கள். அதை அடைவது பற்றிக் கனவு காணுங்கள். அதற்காகவே வாழுங்கள்.
- நீங்கள் செய்யும் வேலையை உற்சாகத்துடன் செய்தால், அதில் அதிக ஆர்வம் காட்டுகிறீர்கள் என்று அர்த்தம்.
- செய்யும் வேலையில் ஆர்வம் இருந்து, அதில் உயர்வு பெறுவோம் என்ற நம்பிக்கை இருந்து, கடினமாக நீங்கள் உழைத்தால் வாழ்வில் எதையும் உங்களால் அடைய முடியும்.
- 'நடக்காது' என்று எல்லோருமே தீர்மானம் செய்யும் ஒரு விஷயத்தை நீங்கள் சாதிக்கிறீர்கள் என்றால், உங்களை ஆர்வம் வழிநடத்துகிறது என்று அர்த்தம்.
- 'அணையா விளக்கு' என்பது வேறெதுவும் இல்லை. உங்களுக்குள் தீயாக எரிந்துகொண்டிருக்கும் ஆர்வம்தான் அது.
- உங்கள் ஆர்வத்தைக் கூண்டுக்குள் அடைத்துவிடாதீர்கள். பிறகு உங்களால் சுதந்திரமாக சாதிக்கவே முடியாது.
- ஆர்வத்துடன் செய்யும் செயலில் ஜெயிக்க முடியும் என்று முதலில் நீங்கள் நம்புங்கள். அப்போதுதான் 'உங்களால் முடியும்' என்று மற்றவர்களும் நம்புவார்கள்.
- வெற்றியை அடையும் தாகமே உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் அர்த்தமாக இருக்கும். அதற்கு வழிகாட்டும் விளக்காக உங்கள் ஆர்வம் இருக்கும்.



# ஆர்வம் மொழிகள்!

- தங்களுக்கு ஆர்வம் இருக்கும் ஒரு செயலைச் செய்வதற்காக வாழ்வில் எல்லாவற்றையும் அர்ப்பணிக்கும் ஒருவருக்கு வெற்றி வாசலில் வந்து காத்திருக்கும்.
- ஆர்வமும் துணிச்சலும் இணையும்போது, நீங்கள் செய்ய நினைக்கும் எதையும் சாதிக்க முடியும்.
- உங்கள் வாழ்வையே மாற்றக்கூடிய வலிமையும் பொறுமையும் திறமையும் ஆர்வமும் உங்களுக்குள் அடங்கியிருக்கின்றன.
- கனவுகளும், அவற்றை நிறைவேற்றுவதில் நாம் காட்டும் ஆர்வமும், நம் கண்ணெதிரே காணும் நிஜத்தைவிடவும் பெரியவை.
- ஆர்வத்துடன் ஒரு வேலையைச் செய்யும்போது, நம்மைப் பற்றி மேன்மையாக நினைப்போம். நாம் இருக்கும் சூழலை நேர்மறையாக அணுகுவோம்.
- உங்கள் வாழ்வையும், அதில் நீங்கள் தேர்வு செய்யும் வாய்ப்புகளையும் உங்களால் மாற்ற முடியும். உங்கள் ஆர்வத்தை உணர்ந்து அவற்றை மாற்றி அமையுங்கள்.
- செய்யும் வேலையை நேசியுங்கள், நேசிக்கும் வேலையைச் செய்யுங்கள். ஆர்வத்துடன் செய்யும்போது அது உங்களுக்கு வளம் சேர்க்கும்.
- எத்தனை முறை தோற்றாலும், ஆர்வம் இருக்கும் ஒரு வேலையை உங்களால் மீண்டும் அதே உற்சாகத்துடன் செய்ய முடியும்.
- உங்கள் ஊருக்கான கடைசி பேருந்தைப் பிடிக்க எவ்வளவு வெறியுடன் ஓடுவீர்களோ, அதே ஆர்வத்துடன் வேலைகளைச் செய்யுங்கள்.
- துணிச்சல் உங்களை வழிநடத்தட்டும், ஆர்வம் உங்களை இயக்கட்டும். எந்த வேலையிலும் வெற்றியை அடைவது சாத்தியம்.
- செய்யும் வேலையில் ஆர்வத்தை நீங்கள்தான் உருவாக்க வேண்டும். வேறு யாரிடமிருந்தும் அதை இரவல் பெற முடியாது. •



# ஆர்வத்தால் மகிழ்ச்சி கிடைக்கும்!

ஆரம்பப் பள்ளிக்குச் செல்லும்போது, 'இந்த வகுப்புகளைக் கடந்துவிட்டால் அதன்பின் மகிழ்ச்சியாக இருக்கலாம்' என்று சொல்வார்கள். உயர்நிலைப் பள்ளிக்குப் போனதும், 'பள்ளி வாழ்க்கையை முடித்துவிட்டுக் கல்லூரிக்குப் போனால் மகிழ்ச்சியாக இருக்கலாம்' என்று சொல்வார்கள். கல்லூரிக்குப் போனதும், 'பட்டம் வாங்கி ஒரு வேலையில் சேர்ந்துவிட்டால் மகிழ்ச்சியாக இருக்கலாம்' என்பார்கள்.

தொடுவானத்தைத் தொடுவதற்குப் போனால் அது இன்னும் இன்னும் தூரத்துக்குப் போவது போல, மகிழ்ச்சி என்பது ஒவ்வொரு கட்டத்திலும் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது.

உண்மையில் மகிழ்ச்சியை இப்படித் தேடுவதே தவறு. 'ஏதோ ஒன்றைக் கடந்துவிட்டால் அதன்பிறகு கிடைப்பதுதான் மகிழ்ச்சி' என்று கருதுவது கூடாது. ஒவ்வொரு கட்டத்தையும் மகிழ்ச்சியுடன் கடக்க வேண்டும். அதற்கு ஆர்வமே உதவுகிறது. தொலைக்காட்சியில் சமையல் ஷோ ஒன்று நடத்துவார்கள். வீட்டில் என்னவெல்லாம் மிஞ்சியிருக்கிறதோ, அவற்றை வைத்து ஒரு ருசியான உணவைச் சமைக்க வேண்டும். அதுதான் போட்டி. இப்படி, நம்மிடம் என்ன இருக்கிறதோ, அதை வைத்து மகிழ்ச்சி அடையப் பழக வேண்டும். ஏதோ ஓர் இடத்தை அடைவதில் மகிழ்ச்சி கிடைப்பதில்லை, அதை அடையும் அந்தப் பயணத்தில்தான் எல்லையற்ற மகிழ்ச்சியை அடைகிறோம்.

மகிழ்ச்சியுடன் ஒவ்வொரு கணத்தையும் கடப்பதற்கு அந்த நேரத்து ஆர்வம் நமக்கு உதவும். குழந்தைப் பருவத்திலிருந்தே கல்வியிலும் வேலையிலும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அது சுலபம்தான். 'வளர்ந்ததும் என்ன ஆகப்போகிறாய்?' என்று கேட்டால் டாக்டர், இஞ்சினியர், ஐஸ்க்ரீம் வியாபாரி என்று ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகப் பதில் வரும். வளர வளர அவர்களின் விருப்பங்கள் மாறிக்கொண்டே இருக்கும். 'விரும்பியதைச் செய்யுங்கள்' என்று பெரியவர்களுக்குச் சொல்வதைப் போலச் 'செய்வதை விரும்புங்கள்' என்று குழந்தைகளுக்குச் சொல்லி வளர்க்கலாம்.

**வளரும் பருவத்தில் ஆர்வத்தைத் தூண்டச் சில விஷயங்களைச் செய்ய வேண்டும்.**

◆ செயல்களிலும் சிந்தனையிலும் அவர்களுக்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டும். எந்த ஒரு விஷயத்தையும் வெவ்வேறு வழிகளில் செய்து பார்க்கும் திறனை அடைய வேண்டும். ஒரு செயலை எப்போது வேகமாகச் செய்வது, எப்போது மெதுவாகச் செய்வது, எப்போது ஆரம்பிக்கலாம், எந்தக் கட்டத்தில் முடிக்கலாம் என்பதையெல்லாம் அவர்கள் அறிந்திருக்க வேண்டும்.

◆ ஒரே விஷயத்தையே திரும்பத் திரும்பச் செய்யும்போது செக்குமாடு போல ஆகிவிடுவார்கள். புதிய சிந்தனையே தோன்றாது. வித்தியாசமான செயல்களில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும். அதுதான் ஆர்வத்தை உருவாக்கும்.

◆ சவால் இல்லாத எளிமையான இலக்குகள், வளர்ச்சிக்கு வழிகாட்டாது. அவர்களுக்கு உயர்ந்த இலக்குகளைக் கொடுங்கள். அவற்றை நோக்கி ஓடிக்கொண்டே இருப்பார்கள்.

◆ உயர்ந்த இலக்குகளை அடையும்போது, அதற்கான பலன்கள் அவர்களுக்குக் கிடைக்க வேண்டும். நல்ல மதிப்பெண் எடுக்கும் ஒரு மாணவனுக்கு அவன் விரும்பும் கல்வி கிடைக்கச் செய்ய வேண்டும். வேலையில் திறமை காட்டும் இளைஞனுக்கு அதற்கு ஏற்ற ஊக்கத்தொகை, சம்பள உயர்வு, பதவி உயர்வு கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆர்வம் விரைவிலேயே காணாமல் போய்விடும். ●

# சாகசங்களில் ஆர்வம் காட்டுங்கள்!



ஒரு திருமணத்துக்குச் செல்கிறீர்கள். நட்சத்திர ஹோட்டல் போன்ற பிரமாண்டமான அரங்கில் திருமணம் நடக்கிறது. திருமணம் முடிந்து சாப்பிடச் செல்லும்போது பிரமித்துவிடுகிறீர்கள். உணவு அறையில் பஃபே விருந்து நடக்கிறது. நூற்றுக்கும் மேற்பட்ட உணவுகள் வரிசையாகப் பாத்திரங்களில் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றின் நிறமும் வாசனையும் உங்களைச் சுண்டி இழுக்கின்றன.

தட்டை எடுத்துக்கொண்டு உணவு வரிசைக்குச் செல்கிறீர்கள். அப்போதுதான் உங்களுக்கு ஒரு குழப்பம் வருகிறது. நூற்றுக்கணக்கான உணவுகள் இருந்தாலும், அவற்றில் அதிகபட்சம் 10 அல்லது 15 வகைகளுக்கு மேல் உங்களால் சாப்பிட்டுப் பார்க்க முடியாது. அதற்குள் வயிறு நிரம்பிவிடும். எந்தெந்த உணவுகளைச் சாப்பிடுவது? நிறைய உணவுகள் இதுவரை பார்த்த மாதிரியோ, சாப்பிட்ட மாதிரியோ இல்லை. இவை எப்படி இருக்கும்? நமக்கு அவற்றின் ருசி பிடிக்குமா? அல்லது வழக்கமான சாம்பார், ரசம், பொரியலே சாப்பிட்டு முடித்துவிடலாமா?

சுற்றிலும் இருப்பவர்களைப் பார்க்கிறீர்கள். அவர்களில் மூன்று ரக மனிதர்கள் இருப்பார்கள். முதல் ரக மனிதர்கள் வரிசையில் நின்று, முதலில் வைத்திருக்கும் உணவுகளைக் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து தட்டில் வைப்பார்கள். பத்து, பதினைந்து உணவுகளைத் தாண்டுவதற்குள் அவர்களுக்கு மிகவும் பிடித்த ஏதோ ஓர் உணவைப் பார்த்துவிடுவார்கள். கண்கள் விரிய அதை நெருங்கி, நிறைய எடுத்து தட்டில் வைப்பார்கள். அவர்களின் தட்டு நிரம்பிவிடும். சாப்பிடப் போய்விடுவார்கள்.

இரண்டாம் ரக மனிதர்கள் சாகச விரும்பிகள். லேசில் திருப்தி அடைய மாட்டார்கள். தட்டைக் கையில் வைத்துக்கொண்டு பஃபே டேபிள் முழுவதையும் ஒரு சுற்று சுற்றி வருவார்கள். அவர்களுக்குப் பிடித்தமான உணவு ஒன்றைப் பார்த்துவிட்டாலும், அங்கேயே தேங்கி நின்றுவிட மாட்டார்கள். இதைவிட மிகவும் பிடித்த வேறொரு உணவு அடுத்து இருக்கலாம் என்ற எதிர்பார்ப்பில் இன்னும் முன்னேறிப் போவார்கள். இப்படி எல்லாவற்றையும் பார்த்துவிட்டே எதைச் சாப்பிடலாம் என்று தீர்மானித்து எடுப்பார்கள்.

மூன்றாம் ரக மனிதர்கள் கடுமையான விமர்சகர்கள். 'இத்தனை உணவுகளைப் பரப்பி வைத்தாலே எதுவும் ருசியாக இருக்காது' என்று நினைப்பார்கள். சிறந்த உணவு ஒன்றைத் தேடி சுற்றிச் சுற்றி வருவார்கள். அப்படி எதுவும் அவர்களுக்குக் கிடைக்காது. 'நூறு ரகம் இருக்கு, நல்லதா ஒன்று இல்லையே' என்று புலம்பியபடி எதையோ எடுத்துக் கொறிப்பார்கள்.

வாழ்க்கையும் இந்த பஃபே விருந்து மாதிரி ஏராளமான வாய்ப்புகளைத் தருகிறது. கல்வி, வேலை, தொழில், வியாபாரம், வாழ்க்கை என்று ஒவ்வொன்றிலும் தேடித் தேடி அடையலாம். கையருகே கிடைப்பதில் திருப்தி அடைந்துவிடாமல், கிடைக்கும் எல்லாவற்றையும் விமர்சனம் செய்து நிராகரிக்காமல், எல்லாத் திசைகளிலும் தேடுங்கள். உங்களுக்குப் பிடித்தமானதும் கிடைக்கும், சிறந்ததும் கிடைக்கும். ஒவ்வொன்றையும் அலசிப் பார்த்து, 'இந்த நேரத்தில் எது சிறந்தது' என்று முடிவு செய்யுங்கள்.

அது சிறந்த ஒன்றாகவும், உங்களுக்குப் பிடித்தமானதாகவும் இருக்கும்போது நிச்சயம் அதில் ஆர்வம் காட்டுவீர்கள். வயதும் அனுபவமும் தெளிவும் கூடும்போது, புதுப்புது செயல்களில் ஆர்வத்தைத் திசை திருப்புங்கள். வித்தியாசங்களைத் தேடி சாகசங்கள் செய்பவர்களுக்கே சிகரங்கள் வசப்படுகின்றன.

# வேலையே
## உங்களின் ஆர்வமாக மாறட்டும்!

ஒரு துறையில் ஆர்வம் இருக்கும்... அவர் படித்த படிப்பு வேறு ஏதோ ஒன்றாக இருக்கும்... கடைசியில் வேலை பார்ப்பதோ இரண்டுக்கும் சம்பந்தம் இல்லாத ஒரு துறையாக இருக்கும். இந்திய இளைஞர்கள் பலருக்கு இப்படித்தான் வாய்க்கிறது. படிக்கும் படிப்பிலும், செய்யும் வேலையிலும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்பவர்கள் ஜொலிக்கிறார்கள். அதைத் தாண்டி, தங்களுக்கு ஆர்வமுள்ள துறையில் எப்படியாவது நுழைந்து உழைக்கிறவர்கள், மகத்தான உயரங்களைத் தொடுகிறார்கள். அப்படி சாதனையாளர்களாக மாறிய சிலர் இங்கே:

**எலான் மஸ்க்:** டெக்னாலஜியில் ஆர்வம் உள்ளவரான எலான் மஸ்க், குறிப்பாக எலெக்ட்ரிக் கார்களை உருவாக்குவதிலும், விண்வெளி வாகனங்களிலும் இளம்வயதிலிருந்து ஆர்வம் கொண்டிருந்தார். அந்த ஆர்வமே அவரை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தை உருவாக்க வைத்தது. இன்று அந்தநிறுவனம்பல செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்புகிறது. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, தன் விண்வெளித் திட்டங்களுக்கு எலான் மஸ்க்கின் நிறுவனத்தையே பயன்படுத்துகிறது. அதேபோல அவர் உருவாக்கிய டெஸ்லா கார், டிரைவர் இல்லாமல் இயங்கும் தொழில்நுட்பம் கொண்ட எலெக்ட்ரிக் கார். அது அமெரிக்காவையே கலக்குகிறது.





**ரே க்ராக்:** உலகப்புகழ்பெற்ற உணவு நிறுவனமாக மெக்டொனால்டு நிறுவனத்தை வளர்த்தெடுத்தவர். அமெரிக்காவின் ஒரு சிறுநகரத்தில் பர்கர் விற்கும் சிறிய பேக்கரில் போல தொடங்கிய நிறுவனத்தை உலகின் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விரிவுபடுத்தியவர். அந்த நிறுவனத்தைத் தொடங்கியவர்கள் வேறு இரண்டு பேர். மெக்டொனால்டு என்ற பெயரை வெற்றிகரமான பிராண்ட் ஆக மாற்றி, பல நகரங்களிலும் கிளைகள் திறந்து உணவு விற்கலாம் என்று அதை மாற்றிவர் ரே க்ராக். தன் 50 வயதுக்குப் பிறகு தனது ஆர்வத்தைப் பின்தொடர்ந்து இதை அவர் சாதித்தார். இன்று உலகெங்கும் மெக்டொனால்டு கிளைகளில் பத்து லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பணியாற்றுகிறார்கள் என்றால், அதன் பிரமாண்டம் புரியும்.

**பில் கேட்ஸ்:** இளம் வயதில் சரியாகப் படிப்பு வரவில்லை என்றாலும், கம்ப்யூட்டர்கள் மீது அப்போதே பில் கேட்ஸுக்கு ஆர்வம் இருந்தது. அவர் படித்த பள்ளிக்கூடம், அவருக்குத் தன் ஆர்வத்தைப் பின்தொடர அனுமதி கொடுத்தது. வகுப்புகளைத் தவிர்த்துவிட்டு ஆய்வுக்கூடத்தில் உட்கார்ந்து கம்ப்யூட்டர்களை ஆராய்ச்சி செய்வார். அந்த வயதிலேயே கம்ப்யூட்டர் புரோக்ராம்கள் எழுதினார், வீடியோ கேம்கள் உருவாக்கினார். கம்ப்யூட்டர்கள் வீட்டுக்கு வீடு பயன்படும் பொருளாக மாறப் போகிறது என்பதைக் கணித்து மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தை உருவாக்கினார். இன்று உலகின் டாப் வரிசை பணக்காரராக இருக்கிறார்.



**ஓப்ரா வின்ஃப்ரே:** வறிய குடும்பத்தில் பிறந்தாலும், இளம் வயதிலேயே கதை சொல்வதிலும், மற்றவர்களுடன் உரையாடுவதிலும் ஆர்வம் கொண்டவராக இருந்தார். இந்த ஆர்வம் எவரையாவது சாதனையாளராக மாற்றுமா என்று யோசிப்பவர்கள், ஒப்ராவின் கதையைப் படிக்கலாம். நெகிழ்ச்சியான வாழ்க்கை அனுபவங்களைச் சொல்வது, பிரபலங்களைப் பேட்டி காண்பது என்று உலகமே கொண்டாடும் டெலிவிஷன் ஆங்கராக அவர் மாறினார். அமெரிக்க அதிபர் தொடங்கி ஹாலிவுட் நடிகை வரை, அவரால் பேட்டி எடுக்கப்படுவதைப் பெருமையாக நினைக்கிறார்கள். தங்கள் ஆர்வத்தைச் செயல்படுத்த நினைக்கும் எளிய மனிதர்களுக்கும் ஒப்ரா முன்மாதிரி.



**ஹோவர்ட் ஷுல்ட்ஸ்:** உலகப் புகழ்பெற்ற காபி ஷாப் சங்கிலித் தொடராக ஸ்டார்பக்ஸ் நிறுவனத்தை மாற்றியவர். காபிக்கு உலகம் முழுக்க வரவேற்பு கிடைக்கும் என்பதைப் புரிந்துகொண்ட அவர், அமெரிக்காவின் சியாட்டில் நகர மார்க்கெட்டில் இருந்த சிறிய கடையை வாங்கினார். பல இடங்களில் அதன் கிளையைத் திறக்க முயன்றார். வங்கிக்கடன் கேட்ட அவரது விண்ணப்பங்கள் 200 முறையாவது நிராகரிக்கப்பட்டிருக்கும். மனம் தளராமல் போராடி, தெரிந்தவர்களிடம் கடன் பெற்று, நிறுவனத்தை விரிவுபடுத்தினார். இன்று உலகின் 80-க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 36 ஆயிரம் ஸ்டார்பக்ஸ் கிளைகள் இருக்கின்றன. தடைகளில் கலங்காமல் தன் ஆர்வத்தைப் பின்தொடர்ந்த ஒருவரின் சாதனை அடையாளம் அது.



**மேரி கே ஆஷ்:** எளிய குடும்பத்தில் பிறந்து, 17 வயதில் திருமணமாகி, வரிசையாக மூன்று குழந்தைகள் பெற்று, அதன்பின் கணவரால் விவாகரத்து செய்யப்பட்ட ஓர் இளம்பெண்ணின் வாழ்க்கை எப்படி இருக்கும்? ஏதேதோ வேலைகள் செய்து குழந்தைகளை வளர்த்தெடுக்கப் போராடினார். அப்போதுதான் தனக்கு விற்பனை செய்யும் திறன் இருக்கிறது என்பதை உணர்ந்தார். ஒரு விற்பனைப் பிரதிநிதியாக வெற்றிகளைக் குவித்தார். அதில் அவருக்கு ஆர்வம் இருந்தாலும், ஒரு பெண் என்பதால் உயர்பதவிகளைக் கொடுக்காமல் புறக்கணித்தார்கள். 'விற்பதில் ஆர்வமுள்ள நாமே பொருட்களையும் உருவாக்குவோம்' என்று 45 வயதில் சொந்த நிறுவனம் தொடங்கினார். அவரின் மேரி கே காஸ்மெடிக்ஸ் நிறுவனத்தில் இன்று ஐந்தாயிரம் பேர் வேலை பார்க்கிறார்கள். 'அமெரிக்க வரலாற்றில் மிகச்சிறந்த பெண்' என்று அவரைப் பாராட்டுகிறார்கள்.



**டோனி ராபின்ஸ்:** இவருக்கு ஏழு வயதாக இருக்கும்போது பெற்றோர் விவாகரத்து செய்துகொண்டார்கள். அம்மா மறுமணம் செய்துகொள்ள, அவருடன் வளர்ந்த நான்கு குழந்தைகளில் மூத்தவர் டோனி ராபின்ஸ். எப்போதும் திட்டும் அம்மா, மிரட்டும் வளர்ப்பு அப்பா, ஆகியோருக்கு மத்தியில் தன் தம்பி, தங்கைகளுக்கு சமைத்துக் கொடுத்து வளர்த்தவர். அதற்காகச் சின்னச் சின்ன வேலைகள் செய்தவர். பள்ளிப்படிப்பைக்கூடத் தாண்டாத இவருக்கு பேச்சில் அதிக ஆர்வம். அதனால் விற்பனைப் பிரதிநிதி ஆனார். 26 வயதுக்குள் அந்தத் தொழிலால் கோடீஸ்வரர் ஆனார். இப்போது தன்னம்பிக்கைப் பேச்சாளராக இருக்கிறார். வாழ்க்கை உங்களுக்கு என்ன துயரங்களைத் தந்தாலும், உங்கள் ஆர்வம் உங்களை உயர்த்தும் என்பதற்கு உதாரணம், டோனி ராபின்ஸ்.






# தோனியிடம்


## கற்றுக்கொள்ளுங்கள் ஆர்வத்தை!

இந்திய கிரிக்கெட் உலகின் தன்னிகரில்லா வீரன், பல வெற்றிகளை வாரிக் குவித்த தலைவன், எந்தச் சூழலிலும் பதற்றமோ டென்ஷனோ அடையாமல் கடமையைச் செய்ததால் ‘கேப்டன் கூல்’ என்று அழைக்கப்பட்டவர் மகேந்திர சிங் தோனி. ஓய்வுக்குப் பிறகும் இந்தியர்களால் கொண்டாடப்படுகிறார். சச்சின் டெண்டுல்கர் போல கிரிக்கெட் நுட்பங்கள் அறிந்தவர் அல்ல தோனி. ‘சாதாரணமாக எல்லோரும் விளையாடுகிற ஷாட்களையே நானும் ஆடுகிறேன், அதனால்தான் எல்லோருக்கும் என்னைப்பிடிக்கிறது’ என்று அவரே சொன்னார். ஆனால், அந்தக் களத்தில் ஜெயிக்க என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்தவர்கள் தோனி போல யாரும் இல்லை. ஆர்வமே அவரை அந்த உயரத்துக்குக் கூட்டிப் போனது.

தோனியைத் தங்களின் ஹீரோவாக கொண்டாடும் குழந்தைகள், தோனியிடம் இருந்து கிரிக்கெட்டை மட்டுமல்ல, வாழ்க்கைக்குத் தேவையான இந்தக் குணங்களையும் கற்றுக்கொள்ளலாம். ‘ஏழு’ என்ற எண் அச்சிட்ட இந்திய அணியின் உடையே தோனியின் அடையாளம். அந்த நம்பர் செவனிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஏழு பாடங்கள்...




- இங்கு ஒரு விஷயத்தை வெற்றிகரமாக தொடங்குவதற்குப் பல பேர் உண்டு. ஆனால், அதை வெற்றிகரமாக முடிப்பவர்கள் வெகுசிலர்தான். பலரும் பாதியிலேயே பாதை மாறி, தோல்வியை ஏற்றுக்கொண்டு ஒதுங்கிவிடுவார்கள். எடுத்த விஷயத்தில் உறுதியாக இருந்து, இறுதி நொடி வரை களத்தில் போராடி வெற்றியைத் தொடும் வெகுசிலரில் முதன்மையானவர் தோனி. ‘The Great Finisher’ என கிரிக்கெட் உலகம் அவரைக் கொண்டாடக் காரணம் அதுதான். ஒரு செயலைக் கண்ணும் கருத்துமாக, கவனம் சிதறாமல் வெற்றிகரமாக முடித்துக் காட்டுவது அரிதிலும் அரிதான அற்புதமான குணநலன். நிச்சயம், நாம் அதை வளர்த்துக்கொள்ள வேண்டும்.
- ஒரு சாதாரண பம்ப் ஆபரேட்டரின் மகனாகப் பிறந்தவர் மகேந்திர சிங் தோனி. கிரிக்கெட் விளையாட்டின் மீது அவர் கொண்ட ஆர்வமும், வளர்த்துக்கொண்ட திறமையும், ரயில்வே துறையில் அவருக்கு வேலை வாங்கித் தந்தது. ஒரு பம்ப் ஆபரேட்டரின் மகன், ரயில்வே துறையில் வேலை பார்ப்பது




என்பதே மிகப்பெரும் வளர்ச்சிதான். ஆனால், தோனியின் கனவுகள் அதையும் கடந்து, மிகப்பெரிய ஒன்றாக இருந்தது. கிடைத்ததில் தேங்கிவிடாமல், தொடர்ந்து ஆர்வத்துடன் தன் கனவை அடைய உழைத்ததால் மட்டுமே அவரால் அதை நிஜமாக்க முடிந்தது. 'பெரிதாகக் கனவு காணுங்கள்' என்று தன் வாழ்க்கை மூலம் தோனி உணர்த்துகிறார்.

◆ யாருடைய திறமைக் கண்டும், தோனி பொறாமை கொண்டது கிடையாது. அவர்களிடம் சென்று, 'அதை எப்படிச் செய்தார்கள்' என்று கேட்டுத் தெரிந்துகொள்வதில் அவர் தயக்கம் காட்டியது கிடையாது. தோனி என்றதும் நம் நினைவுக்கு வருவது ஹெலிகாப்டர் ஷாட். சுழற்றி அடித்தால், பந்து சிக்ஸருக்குப் பறக்கும். அந்த ஷாட்டை தன் நண்பனிடம் இருந்துதான் கேட்டுக் கற்றுக்கொண்டார் தோனி. நமக்குத் தெரிந்தவற்றைத் தெரியாதவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதும், தெரியாதவற்றை மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்வதும் அவசியமானது.

◆ தன்னைவிட வயதிலும், அனுபவத்திலும் மூத்தவர்களை மதிக்கும் மிகச்சிறந்த குணத்தைக் கொண்டிருப்பவர் எம்.எஸ்.தோனி. இந்தியாவின் சிறந்த கேப்டன்களில் ஒருவரான சவுரவ் கங்குலி, அவருடைய கடைசிப் போட்டியை தோனியின் தலைமையின் கீழ் விளையாடினார். அப்போது அவருக்கு மரியாதை செலுத்தும் விதமாக, ஆட்டத்தின் கடைசி நிமிடங்களில் கங்குலியிடம் கேப்டன் பொறுப்பை ஒப்படைத்து நெகிழ்ச்சி அடையச் செய்தார் தோனி. 'நாம் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும், வயதையும் அனுபவத்தையும் மதிக்க வேண்டும்' என்பதை தோனி உணர்த்துகிறார்.


◆ அணியை வழிநடத்திப் பல வெற்றிகளைக் குவித்தாலும், எந்தக் கணத்திலும் தான் தலைவன் எனும் தலைக்கனம் அவர் மண்டையில் ஏறியதில்லை. கோப்பையை வாங்கிய அடுத்த நொடி, தன் அணியினரை அழைத்து அவர்களிடம் ஒப்படைத்துவிடுவார். அதுமட்டுமல்ல, வெற்றியின்போது அணியினரை முன்நிறுத்தி அவர் பின்னால் நகர்ந்துவிடுவார். தோல்வியின்போதோ, அவரே முன்வந்து பொறுப்பை ஏற்றுக்கொள்வார். இந்தச் சுயநலமற்ற குணம், அனைவருமே அவரிடம் கற்க வேண்டிய ஒன்று.

◆ தோனி மிடில் ஆர்டர் பேட்ஸ்மேனா, டாப் ஆர்டர் பேட்ஸ்மேனா, லோயர் ஆர்டர் பேட்ஸ்மேனா, விக்கெட் கீப்பரா, கேப்டனா, வெள்ளைப் பந்து வீரரா, சிவப்புப் பந்து வீரரா, 'எதில் அவர் ஸ்பெஷலிஸ்ட்?' எனக் கேட்டால், 'எல்லாமேதான்' என்பதே பதில். ஒரு துறையில் தனக்கு இதுதான் சரியாக வருகிறது எனக் காலத்துக்கும் அதிலேயே தேங்கிவிடாமல், எல்லாவற்றையும் முயற்சித்து, நுணுக்கங்களைக் கற்றறிந்து, அவற்றில் தேர்ச்சி பெற்றார் தோனி. சூழ்நிலைக்கு ஏற்ப வேகமும் விவேகமும் சரிவிகிதத்தில் கலந்து செயலாற்றுகிற அவர் போக்கும், அதில் சிதறாத கவனமும்தான் தோனியை உச்சத்தில் ஏற்றிக் கொண்டாடுகிறது.



◆ தோனி, தன் உடல்நலத்தில் அதீத அக்கறை கொண்டவர். சத்தான உணவுகளை ஒதுக்காமல் உட்கொண்டதால், எட்டுத் திசையிலும் அவர் அடித்த பந்துகள் பறந்தன. தோனியைவிட வேகமாக ரன் ஓடக்கூடிய வீரர் யாருமில்லை. தன்னைவிட வயது குறைவான இளைஞர்களையே, ஓட்டத்தில் தோற்கடித்துவிடுவார் தோனி. வெற்றி இலக்கை நோக்கிய நமது பயணத்தில் மனதின் ஆரோக்கியம் எந்த அளவுக்கு முக்கியமோ, உடலின் ஆரோக்கியமும் அந்த அளவு முக்கியம்! ●

# வாசகர் கடிதங்கள்



'வெண்மை' வெற்றியாளர் சிறப்பிதழ் வாசித்தேன். அத்தனை பக்கங்களிலும் மேம்பாட்டுக்கு வழிவகை செய்யும் தகவல்கள், வாக்கியங்கள். உலகின் மிகச்சிறந்த வெற்றியாளரான வாரன் பப்பெட்டின் வாழ்க்கை முறையையும், வெற்றி அடைவதற்கான ஆலோசனைகளையும் அழகாகச் சித்தரித்திருந்த 'ராம்ராஜ் காட்டன்' நிறுவனரின் கடிதம் மனதில் பதிந்தது.

***- லெ.நா.சிவகுமார், சென்னை-33.***

'எதிலும் வெற்றி பெற அதிகம் உழைக்க வேண்டும்' என்கிற நிறுவனரின் கடிதம், வெற்றிக்கு வழிகாட்டுதல்கள், கவனம் சிதறாத உழைப்பு, வெற்றியாளர் ஆக்குவது எது... போன்ற பல தலைப்புகளில் நாங்கள் வாழ்வில் வெற்றியைச் சுவைத்திடக் கட்டுரைகளைத் தந்த 'வெண்மை'யைப் பாராட்டி மகிழ்கிறேன்.

***- முனைவர் உமாதேவி பலராமன், திருவண்ணாமலை.***

பிறக்கும்போதே யாரும் வெற்றியாளர்களாகப் பிறப்பதில்லை. கடுமையாக உழைத்து, முன்னேறிப் புகழ்பெறுகிறார்கள். அப்படிப்பட்ட வெற்றியாளர்கள் பற்றிய தகவல்களுடன் 'வெண்மை' தந்த வெற்றியாளர் சிறப்பிதழ் வெகு அற்புதம்!

***- அயன்புரம் த.சத்தியநாராயணன்***

# ஆர்வத்தால் கிடைக்கும் அறிவு!



**தூ**க்கு தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் இருந்தபோதும் படித்துக்கொண்டே இருந்தவர் தியாகி பகத் சிங். தூக்குமேடை ஏறுவதற்கு முதல் நாள்கூடப் பதற்றப்படாமல் ஒரு புத்தகத்தை அமைதியாகப் படித்துக்கொண்டு இருந்தார் அவர். நாளை மரணம் என்றாலும் இன்றும் தனக்கு ஆர்வமுள்ள செயலைச் செய்தார்.

தங்கள் செயலில் ஆர்வம் காட்டும் மனிதர்கள் இப்படித்தான் இலக்குகள் வைத்து அவற்றை நிறைவேற்றுவார்கள். தங்களுக்கு ஆர்வமுள்ள விஷயம் குறித்துத் தேடித் தேடிப் படிப்பார்கள். கற்றுக்கொள்வார்கள். அதில் ஒரு நிபுணராக மாறுவதற்கு ஆசைப்படுவார்கள். காபியை ருசித்து அதன் தரத்தைச் சொல்வதற்காகவே நிபுணர்கள் உண்டு. ஒரு மிடறு பருகியதுமே,

## ஆர்வத்தை உணர்வது எப்படி?

**நி**றைய பேர் தங்களுக்கு எதில் ஆர்வம் என்பதை உணராமலே இருக்கிறார்கள். அதை எப்படி அறிவது? எதை இழந்தால் நீங்கள் வெறுமையாகவும் சோகமாகவும் உணர்கிறீர்களோ, அதில்தான் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது. உணவு, தூக்கம், உடைகள் போன்ற தினசரி விஷயங்களை விட்டுவிடுங்கள். நண்பர்களுடன் உரையாடுவது, புத்தகம் படிப்பது, ரசித்து ஒரு வேலையைச் செய்வது, யாருக்கோ கற்றுக் கொடுப்பது, சமூகப்பணி செய்வது, பயணம் போவது, வாகனம் ஓட்டுவது... இப்படி எதைச் சில நாட்கள் செய்யாமல் போனால் எதையோ இழந்தது போல உணர்கிறீர்களோ, அதில்தான் உங்களுக்கு ஆர்வம் அதிகம் இருக்கிறது.

ஒருவருக்கு கார் ஓட்டுவது பிடித்திருக்கும். ஆனால், வாரத்தில் ஆறு நாட்களும் தினமும் எட்டு மணி நேரம் கார் ஓட்டிக்கொண்டே இருந்தாலும் அது அலுக்கவே இல்லை என்றால், அவருக்கு அதில்தான் ஆர்வம் அதிகம். இப்படி எந்தச் செயலில் ஒருவருக்கு ஆர்வம் இருந்தாலும், அவர் தனக்குள் சில கேள்விகளைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் கழித்தும் எனக்கு இதே ஆர்வம் இதில் இருக்குமா? இந்த ஆர்வம் எனக்கு எதைக் கொடுக்கும், பணத்தையா அல்லது மகிழ்ச்சியை மட்டுமா? மகிழ்ச்சியை மட்டும் என்றால் பணம் சம்பாதிக்க நான் என்ன செய்யப் போகிறேன்? இந்தக் கேள்விகளுக்கு விடை தெரிந்துகொண்டு, உங்கள் ஆர்வத்தைப் பின்தொடருங்கள்.




'**நீ**ங்கள் எதில் ஆர்வமாக இருக்கிறீர்களோ அதைச் செய்யுங்கள், பணம் தானாக வரும்' என்று நிறைய பேர் உற்சாகப்படுத்துவார்கள். ஆர்வத்துடன் ஒரு சாம்ராஜ்ஜியத்தை உருவாக்கி கோடிகளிலும் புரளும் பணக்காரர்களை இதற்கு உதாரணமாகக் காட்டலாம். ஆனால், வெறும் ஆர்வம் மட்டுமே எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் பணம் சம்பாதித்துக் கொடுக்காது.



அந்த காபித்தூளை அரைத்த காபிக்கொட்டை எந்த மண்ணில் விளைந்தது, அதன் தரம் என்ன, அது எந்த அளவுக்கு மக்களுக்குப் பிடிக்கும் என்பதைச் சொல்லிவிடுவார்கள். சாம்பார் கொதிக்கும்போதே அதன் வாசனையை வைத்து 'உப்பு கொஞ்சம் குறைவா இருக்கு' என்பவர்கள் உண்டு. ஆர்வமே அவர்களை இப்படி நிபுணர் ஆக்கும்.

ஆர்வத்தால் ஞானம் பெறுங்கள்!

## ஆர்வத்துடன் வாழுங்கள்!

உங்களுக்கு எதைச் செய்வதில் திறமை இருக்கிறது, எது உங்களுக்கு பணம் சம்பாதித்துத் தருகிறது, உங்களின் எந்த செயல் சமூகத்துக்குப் பயன் தருகிறது, எதில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறது... இந்த நான்கு விஷயங்களையும் அலசிப் பார்க்க வேண்டும். ஒருவர் இந்த நான்கையும் செய்தாக வேண்டும். அரிதாக சிலருக்கு ஆர்வமும் திறமையும் ஒரே விஷயத்தில் இருக்கும், அது பணமும் சம்பாதித்துத் தரும். அதன் மூலம் அவர் சமூகத்துக்கும் உதவுவார். எல்லோருக்கும் இப்படி வாய்க்காது.

வாழ்க்கையைத் திட்டமிட்டு, இந்த இந்த இலக்குகளை இந்த நேரத்துக்குள் அடைய வேண்டும் என்று வரையறை செய்துகொள்ளுங்கள். அதற்கேற்ற திறமையையும் அறிவையும் வளர்த்துக்கொள்ளுங்கள். தெளிவாகச் செயல்படுங்கள், அந்த செயலில் தொடர் முயற்சியும் உறுதியும் காட்டுங்கள். விரும்புவதை உங்களால் அடைய முடியும்.

## ஆர்வம் வேறு... திறமை வேறு..!

எது உங்களுக்கு ரொம்பப் பிடிக்கும்?, எதை உங்களால் திறமையாகச் செய்ய முடியும்? – இந்த இரண்டு கேள்விகளுக்கும் ஒரே பதிலைச் சொல்பவர்கள் குறைவு. கிரிக்கெட் நிறைய பேருக்குப் பிடிக்கும். ஆனால், அவர்களால் திறமையாக ஆட முடியாது. பாடுவதும் நடனம் ஆடுவதும் பலருக்குப் பிடித்தமான செயல்கள். ஆனால், குரல் சரியாக இருக்காது. நடனத்திலும் பயிற்சி எடுத்திருக்க மாட்டார்கள்.

வேறு சிலருக்கோ, ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் அசாத்திய திறமை இருக்கும். ஆனால், அந்த செயலில் அவர்களுக்கு ஆர்வம் இருக்காது. ஒரு நாள் உட்கார்ந்து படித்தால் 60 மார்க் வாங்கி பாஸ் செய்யும் மாணவர்கள் உண்டு. அவர்கள் வருடம் முழுக்க உட்கார்ந்து படித்தால், மாநிலத்தில் முதலிடம் பிடிக்கலாம். ஆனால், ஆர்வம் காட்ட மாட்டார்கள். நன்கு ஓடும் திறமை இருப்பவர், முறையாகப் பயிற்சி பெற்றால் பதக்கங்கள் வாங்கக்கூடியவர், அதில் ஆர்வமே காட்டாமல் வேறு ஏதோ செய்துகொண்டிருப்பார்.

இப்படி ஆர்வமும் திறமையும் ஒத்துப் போகாத சூழலில் ஒருவர் என்ன செய்யலாம்? எதில் ஆர்வம் இருக்கிறதோ, அந்தப் பக்கம் போவதே நல்லது. ஆர்வமுள்ள ஒரு செயலில் அவரால் எளிதாக திறமையை வளர்த்துக்கொள்ள முடியும். திறமை காட்டும் துறையில் ஈடுபாடு இல்லாவிட்டால் முன்னுக்கு வரவே முடியாது.

## ஆர்வமே பணம் சம்பாதித்துத் தருமா?

சில ஆர்வங்கள் வெறுமனே மனநிறைவைக் கொடுக்கும், பண நிறைவைக் கொடுக்காது. சில ஆர்வங்கள் செலவையும் இழுத்துவிடும். ஒருவர் பியானோ வாசிப்பதில் ஆர்வம் காட்டுகிறார் என்றால், அதை வாங்குவது முதல் கற்றுக்கொள்வது வரை எல்லாமே செலவு பிடிக்கும் விஷயங்கள். எல்லோருக்கும் அது பணம் சம்பாதித்துக் கொடுப்பதில்லை. இப்படி நிறைய உதாரணங்களைச் சொல்லலாம்.

அதனால் நிறைய பேர் பணம் சம்பாதிப்பதற்கு ஒரு வேலை அல்லது தொழிலை வைத்துக்கொள்கின்றனர். அதில் வரும் வருமானத்தில் ஒரு பங்கை, தாங்கள் ஆர்வம் காட்டும் விஷயத்துக்குச் செலவிடுகின்றனர். இதில் ஒன்றும் தப்பில்லை.



# ஆர்வமே அடித்தளம்!



புகழ்பெற்ற கட்டடக் கலைஞர் கிறிஸ்டோபர் ரென். அவர் வாழ்வில் நடந்ததாக ஒரு சம்பவம் சொல்வார்கள். லண்டன் மாநகரம் பெரும் தீவிபத்தில் சிதைந்தபோது, பழைய கட்டடங்களை மீண்டும் கட்டியெழுப்பும் வேலை நடந்தது. பழமையான புனித பால் தேவாலயத்தை மீண்டும் உருவாக்கினார் ரென்.

ஒருநாள் அந்த வேலை நடந்த இடத்துக்குப் போனார் ரென். தான் முதலில் பார்த்த தொழிலாளியிடம், "என்ன செய்கிறாய்?" என்று கேட்டார். "நான் வேலை செய்கிறேன்" என்றார் அவர். இரண்டாவது தொழிலாளியிடம் கேட்டபோது, ''நான் கற்களை அடுக்கிச் சுவர் எழுப்பிக்கொண்டிருக்கிறேன்'' என்றார். மூன்றாவது தொழிலாளியோ, "நான் இறைவனுக்குத் தேவாலயம் உருவாக்கிக்கொண்டிருக்கிறேன்" என்றார்.

இதில் மூன்றாவது தொழிலாளி மட்டுமே ஆர்வத்துடன் உழைப்பவர் என்று பலரும் நினைக்கலாம். அப்படிச் சொல்ல முடியாது என்பதே உண்மை. மற்ற இரண்டு பேருக்கும் தங்கள் பணியின் உன்னத நோக்கம் தெரியாமல் இருக்கலாம். ஆனால், அவர்கள் முழு முயற்சியுடன் தங்கள் உழைப்பைச் செலுத்தினால், அவர்களும் ஆர்வமான வேலையாட்கள்தான். மூவரும் செய்வது ஒரே வேலைதான். ஆனால், பார்வைகள்தான் வேறு வேறு. 'நான் வேலை செய்கிறேன்' என்று சொன்னவர், கற்களை நேர்த்தியாக அடுக்கிச் சுவர் எழுப்புவதில் நிபுணராக இருக்கக்கூடும், இரண்டாவது மனிதரும் அப்படியானவராக இருக்கலாம். தங்கள் வேலையை முழுமையாகப் பார்க்கும் பார்வை அவர்களிடம் இல்லை என்பது மட்டுமே குறை.

ஒரு நிர்வாகி, தன்னிடம் பணிபுரியும் எல்லோர் மனத்திலும் ஆர்வத்தை விதைக்க முடியாது. ஆனால், அவர்கள் நேர்த்தியாக வேலை பார்ப்பதை உறுதி செய்ய முடியும்.

'ஒருவர் வேலையை எவ்வளவு நேசித்தாலும், அந்த வேலையோ, நிறுவனமோ அந்தத் தொழிலாளியை நேசிக்காது' என்று சொல்வார்கள். அது உண்மையில்லை. ஆர்வத்துடன் கடமையைச் செய்யும் எவருக்கும் அதற்கான பலன் திரும்பக் கிடைக்கும். சமயங்களில் அது நேரடியாகக் கிடைக்காமல் போகலாம்.

காலமாற்றங்களுக்கு ஏற்றபடி வேலைகளும் தொழில்களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. குழாய் பதிப்பது என்றால், முன்பெல்லாம் மனிதர்கள் கூட்டமாக வந்து பள்ளம் தோண்ட வேண்டும். பொக்லைன், கிரேன் போன்ற இயந்திரங்கள் அறிமுகமான பின்பு அந்த வேலைக்கு மனிதர்கள் தேவைப்படுவதில்லை. 25 ஆண்டுகளுக்கு முன்பு எஸ்.டி.டி பூத் நடத்துவது லாபகரமான தொழில். செல்போன் வந்ததும் அவை காணாமல் போய்விட்டன. இன்று இருக்கும் பல வேலைகளும் இன்னும் 25 ஆண்டுகளில் காணாமல் போய்விடலாம் என்கிறார்கள் டெக்னாலஜி வல்லுநர்கள். அவற்றுக்குப் பதிலாக புதிய வேலைகள் உருவாகக்கூடும். 'எதிர்காலத்தில் கம்ப்யூட்டர் துறை இத்தனை கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்' என்று 50 ஆண்டுகளுக்கு முன்பு யாரும் நினைத்திருக்க மாட்டார்கள் அல்லவா?

எந்த வேலை செய்தாலும், அதை ஆர்வத்துடன் செய்துவந்து, காலமாற்றங்களுக்கு ஏற்றபடி கற்றுக்கொள்வதே ஒருவரை எப்போதும் தகுதியானவராக வைத்திருக்கும். உங்கள் திறமையும், உலகத்தின் எதிர்பார்ப்பும் ஒத்துப்போக வேண்டும். அதுவே உங்களுக்கு வருமானத்தையும் உயர்வையும் தரும் வேலைவாய்ப்பாக இருக்கும். அதில் ஆர்வத்தை ஏற்படுத்திக்கொள்வதே வாழ்வில் நிம்மதியைக் கொடுக்கும். ●




# மருத்துவர்கள் நிகழ்ச்சியில் ராம்ராஜ்!

இந்திய அவசரச் சிகிச்சை மருத்துவர்கள் சங்கத்தின் (Indian Society of Critical Care Medicine – ஐ.எஸ்.சி.சி.எம்.) கோவை கிளை சார்பில் ஐ.எஸ்.சி.சி.எம் தினக் கொண்டாட்டம் கோவையில் நடைபெற்றது. ஒவ்வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நோயின் அபாயம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நிகழ்ச்சி நடைபெறும். இந்த ஆண்டு சிறிய கொப்புளங்கள் மற்றும் புண்களால் உடல் உறுப்புகளில் பாதிப்பு ஏற்படும் செப்சிஸ் என்ற பிரச்னையைத் தடுத்தல், சிகிச்சை அளித்தல் மற்றும் நிவாரணம் பெறுதல் எனும் தலைப்பில் நிகழ்ச்சி நடந்தது.

இந்த நிகழ்ச்சியில் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தின் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார். “கடமையைச் செய்பவர்கள் எல்லோரும் அவை இனிதே நடைபெற கடவுளை வணங்குவர். ஆனால், கடமையைச் செய்யும் டாக்டர்கள் அனைவரும் கடவுளாகவே பார்க்கப்படுகின்றனர். நோயாளிகளின் உயிரைக் காப்பாற்றிக் கடவுளாக வாழ்பவர்கள் மருத்துவர்கள். எப்படிப்பட்ட நாத்திகவாதியாக ஒருவர் இருந்தாலும் கூட, தீவிரச் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறும் தங்களின் உறவுகளைக் காப்பாற்றும் மருத்துவர்களைக் கைக்கூப்பி வணங்குவர். இறைவனுக்கு நிகரானவர்கள் மருத்துவர்கள். தூய்மையாகச் சுற்றுப்புறத்தை வைத்துக்கொண்டு, நாமும் தூய்மையாக இருந்தால், நோய்த்தொற்று ஏற்படாது. தூய்மையின் அடையாளம்தான் வெண்மை” என்று திரு. நாகராஜன் உரையாற்றினார்.

கோவை பாரதிய வித்யா பவன் தலைவர் டாக்டர் பி.கே. கிருஷ்ணராஜ் வாணவராயர் காணொளி வாயிலாகச் சிறப்புரை நிகழ்த்தினார். “நம்மில் பலர் உடல் சார்ந்து உண்டாகும் சில பிரச்னைகளை அலட்சியமாக விட்டு விடுகிறோம். இதனால் எதிர்பாராத விளைவுகளைச் சந்திக்க நேர்கிறது. ஆகையால், எப்போதும் வருமுன் காப்போம் என்று இருக்க வேண்டும். தீவிரச் சிகிச்சைப் பிரிவில் செயல்படும் மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்டோரின் பணிகள் இன்றியமையாதவை” என்றார் அவர்.

கோவை பி.எஸ்.ஜி உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் டாக்டர் புவனேஸ்வரன், கௌரவ விருந்தினராகப் பங்கேற்றார். நிகழ்ச்சியில் ஐ.எஸ்.சி.சி.எம் அமைப்பின் தலைவர் டாக்டர் சிவகுமார், செயலாளர் டாக்டர் சத்தியமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர். ●

# குழந்தைகளிடம் ஆர்வத்தை வளர்ப்போம்!

சிறு நகரம் ஒன்றில் மரத்தொழில் செய்யும் கடை ஒன்றை வைத்திருந்தார் ஒருவர். பரம்பரையாக அவர்கள் குடும்பம் செய்துவரும் தொழில் அது. “எனக்குப் பிறகு இதை நீதான் செய்ய வேண்டும்” என்று தன் ஒரே மகனிடம் சிறு வயதிலேயே சொல்லியிருந்தார். அவன் அந்தத் தொழிலைப் பழகினாலும், அதில் ஆர்வம் காட்டவில்லை. அதில் தனக்கு வளர்ச்சி இல்லை என்று நம்பினான்.

பள்ளிக் காலத்திலேயே அவனுக்குச் சமையல் பிடிக்கும். அம்மாவுக்கு உடல்நலம் இல்லாததால் வீட்டில் எப்போதும் அவன் சமைப்பான். அதில் தனக்கு ஆர்வம் இருப்பதை உணர்ந்தான். அப்பாவின் மறைவுக்குப் பிறகு துணிச்சலாக அந்த மரக்கடையை விற்றுவிட்டுச் சின்னதாக ஓர் உணவகம் ஆரம்பித்தான். ருசியாக அவன் சமைத்துத் தருவதைச் சாப்பிட்டுப் பார்த்து நிறைய கூட்டம் வந்தது. திருமணம் போன்ற விசேஷங்களுக்கும் சமைக்கக் கூப்பிட்டார்கள். படிப்படியாக அந்த உணவகம் பெரிதாகி, இன்று நகரிலேயே பெரிய ஹோட்டலாக வளர்ந்துவிட்டது. அவனிடம் 500 பேர் வேலை பார்க்கிறார்கள்.

குழந்தைப் பருவத்திலேயே ‘நீ எதிர்காலத்தில் இதைத்தான் செய்ய வேண்டும்’ என்று குழந்தைகளைக் கடிவாளம் கட்டிய குதிரையாக ஓடவிடாமல், அவர்களின் ஆர்வத்தைக் கண்டு அந்தத் திசையில் அனுப்ப வேண்டும் என்பதை உணர்த்தும் கதை இது. குழந்தைகளின் ஆர்வத்தைக் கண்டறிந்து வளர்க்க என்ன செய்ய வேண்டும்?



◆ குழந்தைகள் எதிலாவது வெற்றி பெற்றால் மட்டுமே அவர்களைப் பல பெற்றோர்கள் பாராட்டுகிறார்கள். ‘சூப்பர், நல்ல மார்க் வாங்கியிருக்கே’, ‘வெரிகுட், ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசு வாங்கியிருக்கே’ என்று அவர்களின் வெற்றிகளை மட்டுமே பாராட்டுவது முறையல்ல. சில விஷயங்களில் அவர்கள் முயன்று தோற்றுப் போயிருக்கலாம். அந்த முயற்சியைப் பாராட்டுங்கள். பல பள்ளிகளில் ஏதாவது ஒரு போட்டியில் பங்கேற்றாலே, ‘பங்கேற்பாளர்’ என்று சான்றிதழ் தருகிறார்கள். குழந்தைகளை ஊக்கப்படுத்தும் முயற்சிதான் இது. அவர்களின் முயற்சியை, முன்னேற்றத்தை எப்போதும் பாராட்டுங்கள்.

◆ குழந்தைகள் புதிய விஷயங்களைச் செய்ய முயலும்போது, ‘‘உனக்கு இதெல்லாம் தெரியாது, வேண்டாம்’’ என்று தடுக்காதீர்கள். அந்த விஷயம் அவர்கள் வளர்ச்சிக்கு உதவும் என்றால், உற்சாகப்படுத்துங்கள். ரிஸ்க் எடுக்கும் அவர்களின் துணிச்சலைப் பாராட்டுங்கள். வெற்றி மட்டுமே பாராட்டுக்குரியது கிடையாது.

◆ ‘என்னால் முடியும்’ என்ற மனநிலையைக் குழந்தைகளுக்கு ஏற்படுத்துங்கள். ‘இதைச் செய்வது சாத்தியமில்லை’ என்று அவர்கள் பின்வாங்கும் நிலை ஏற்படக்கூடாது. கடினமான முயற்சிகளுக்குப் பிறகு நீங்கள் சாதித்த கதைகளைச் சொல்லி அவர்களை






உற்சாகப்படுத்துங்கள். அதை எங்கு கற்றுக்கொள்ளலாம், எப்படி அதை இன்னும் சிறப்பாகச் செய்யலாம் என்று அவர்களுக்கு வழிகாட்டுங்கள். அவர்களின் பயத்தை அகற்றுங்கள்.

◆ குழந்தைகளுக்கு விதவிதமான பயங்கள் ஏற்படும். அந்தப் பயங்களில் அவர்கள் மிரண்டு விலகிவிடக்கூடாது. அதுபோன்ற சூழல்களில் குழந்தைகளுக்குப் பெற்றோரே வழிகாட்ட வேண்டும். ஒவ்வொரு முறையும் அவர்கள் பயத்தை வென்று முன்னேறும்போது, அதைக் குறித்து வையுங்கள். அடிக்கடி அவர்களிடம் சொல்லிக் காட்டுங்கள். அது அவர்களைத் தைரியசாலிகளாக வளர்க்கும்.

◆ குழந்தைகளிடம் துணிச்சலையும் ஆர்வத்தையும் வளர்ப்பதற்குச் சரியான கேள்விகளைக் கேளுங்கள். 'முன்பு நீ செய்ய பயந்த ஒரு விஷயத்தை இப்போது செய்வது சுலபமாக இருக்கிறதா', 'உனக்கு எதையாவது செய்வதற்கு பயமாக இருக்கிறதா, அந்த பயத்தைப் போக்க நான் எந்த வகையில் உதவ வேண்டும்', 'இவ்வளவு பயப்படுகிறாயே, இதைச் செய்வதால் மோசமாக என்ன நடந்துவிடும் என்று நினைக்கிறாய், அந்த பயத்துக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா', 'இதேபோல உன் நண்பர்கள் பயந்தால் அவர்களுக்கு என்னவகையில் நீ ஆறுதல் சொல்வாய்' என்றெல்லாம் கேள்விகள் கேளுங்கள்.





◆ அறிவுரைகள் சொல்வதால் எந்தப் பயனும் இல்லை. அவை அவர்களிடம் எந்த மனமாற்றத்தையும் ஏற்படுத்தாது. அதற்குப் பதிலாக உரையாடலையே செய்யுங்கள். அவர்கள் தயக்கமில்லாமல் தங்கள் பயத்தைப் பகிர்ந்துகொள்ள அனுமதியுங்கள். கோபமாகவோ, எரிச்சலாகவோ எதையேனும் குறுக்கிட்டுச் சொன்னால், அவர்கள் பேசுவதை நிறுத்திவிடுவார்கள்.



◆ எதையும் வற்புறுத்திச் செய்ய வைக்காதீர்கள். 'நீச்சல் குளத்தைப் பார்த்து பயப்படும் ஒரு குழந்தையை வலுக்கட்டாயமாகப் பிடித்துத் தள்ளிவிட்டால் தானாக நீச்சல் கற்றுக்கொள்வார்கள்' என்று கிராமங்களில் சொல்வார்கள். ஆனால், இந்த முரட்டுச் சிகிச்சை அந்தக் குழந்தைக்குத் தண்ணீர் மீதான பயத்தை அதிகரிக்கவே செய்யும். பெற்றோர்கள் நீச்சல் அடித்து, “இது எவ்வளவு ஜாலியாக இருக்கிறது தெரியுமா” என்று ஆர்வத்தைத் தூண்டலாம். அதிக ஆழமில்லாத பகுதியில் அவர்களைச் சற்று நேரம் சும்மா தண்ணீரில் விளையாடச் செய்யலாம். படிப்படியாக ஆர்வம் வளரும். வற்புறுத்தி செய்ய வைத்தால் வெறுப்புதான் ஏற்படும்.

◆ கணக்குப் பாடத்தை நினைத்துக் குழந்தை பயப்படுகிறதா? வீட்டில் பக்கத்தில் அமரவைத்துச் சில கணக்குகளைப் போடவைத்து வழிகாட்டுங்கள். புதிய ஆசிரியரை நினைத்துப் பயப்படுகிறதா? அந்த ஆசிரியர் போல உங்களை நினைத்துக்கொள்ளுமாறு சொல்லி, உரையாட வையுங்கள். பயப்படும் எந்த விஷயத்தையும் பழகிப் பார்த்தால் பயம் போய்விடும் என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்.

◆ சைக்கிள் ஓட்டப் பழகுவதற்குக் குழந்தை பயப்படுகிறதா? முன்பு இதேபோலப் பயந்த ஒரு விஷயத்தில் அவர்கள் இப்போது உற்சாகமாக ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள். அந்த உதாரணத்தைச் சொல்லுங்கள். சைக்கிள் ஓட்டுவதில் கிடைக்கும் சந்தோஷங்களைச் சொல்லுங்கள். “உன் ஃபிரண்ட்ஸ் எல்லார்கிட்டயும் உன் வீரத்தைப் பற்றிப் பெருமையா சொல்லிக்கலாம்'' என்று ஊக்கப்படுத்துங்கள். அவர்களுக்கு ஆர்வம் வரும்.

◆ குழந்தைகளை அடுத்தவர்களுடன் ஒப்பிட்டு அவமானப்படுத்துவது கூடாது. அதே சமயத்தில், அவர்களுக்குள் போட்டி மனப்பான்மையை ஆரோக்கியமான விதத்தில் ஏற்படுத்துவதில் தப்பில்லை. “நல்லா ஓடப் பழகிட்டு ஸ்கூல்ல நடக்கற போட்டியில எல்லோரையும் முந்திக்கிட்டு நீ முதல் ஆளா வரணும்” என்று சொல்வது அவர்களை ஊக்கப்படுத்தி ஆர்வத்தைத் தூண்டும்.

◆ குழந்தைகள் வளர வளர பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். ஒவ்வொன்றைப் பற்றியும் நேர்மறையாக அவர்களிடம் விளக்குங்கள். 'இது என்னால் முடியுமா' என்ற சந்தேகம் சிறிதாக எழுந்தாலும், அவர்களிடம் நேர்மறையாகப் பேசி தன்னம்பிக்கையை ஏற்படுத்துங்கள். இதுவே அவர்களின் ஆர்வத்தைத் தூண்டும். அவர்களுக்குள் ஒரு பரவசத்தை உருவாக்கி, எதையும் உற்சாகமாகச் செய்ய வைக்கும்.

◆ சுயமாக யோசித்து முடிவெடுக்கும் குணம் குழந்தைகளுக்கு வளர வேண்டும். எப்போதுமே பெற்றோர்களின் வழிகாட்டலை எதிர்பார்த்தபடி அவர்கள் இருக்கக்கூடாது. ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் அவர்களே யோசித்துச் சுயமாக முடிவுகள் எடுக்கும்போது, இயல்பாக அவர்களுக்குள் ஆர்வம் கிளர்ந்தெழும். ●

# வேலையை ஆர்வத்துடன் செய்யுங்கள்!




பயந்தாங்கொள்ளியான வடிவேலு, ரௌடிகளுடன் வாக்குவாதம் செய்துவிட்டுத் தானும் போலீஸ் ஜீப்பில் கஷ்டப்பட்டு ஏறி, 'நான் ஜெயிலுக்குப் போறேன்... ஜெயிலுக்குப் போறேன்... நானும் ரௌடிதான்' என்று கத்துவார். இப்படி நிறைய பேர் 'நானும் வேலைக்குப் போறேன்' என்ற மனநிலையில்தான் இருக்கிறார்கள். 'இந்த நிறுவனத்தில் இந்த வேலை செய்கிறேன்' என்று உணர்ச்சியே இல்லாமல் சொல்வதற்கும், 'இந்த நிறுவனத்தில் நான் இப்படி ஒரு பொறுப்பில் இருக்கிறேன்' என்று மகிழ்ச்சியுடன் சொல்வதற்கும் வித்தியாசம் உண்டு.

பிழைப்புக்கு வேறு வழியில்லாமல் வேலை செய்பவர்கள், அதை ஏனோ தானோ என்று செய்வார்கள். ஒரு வேலையைத் தங்களின் அடையாளமாக, வாழ்க்கையாக நினைப்பவர்கள் அதை ஆர்வத்துடன் செய்வார்கள். இப்படி ஆர்வத்துடன் செய்பவர்களுக்கு வாழ்வில் என்னவெல்லாம் கிடைக்கும்?

- சராசரி நபர்கள் ஒரு வேலையைத் தங்களுக்கு வருமானம் பெற்றுத் தரும் வாய்ப்பாக மட்டுமே நினைக்கிறார்கள். ஆர்வத்துடன் அதைச் செய்பவர்களோ, வாழ்நாள் முழுக்கத் தங்களுக்கு மதிப்பையும் அடையாளத்தையும் தரும் ஒரு விஷயம் என்று அதை உயர்வாகக் கருதுகிறார்கள்.
- சராசரி நபர்கள் ஒரு வேலையைக் குறுகிய கால செயலாக மட்டுமே கருதுகிறார்கள். அந்த வேலையின் மீது அவர்களுக்கு எந்தப் பிடிப்பும் இருப்பதில்லை. ஆர்வமுள்ள பணியாளர்கள், எந்த நேரத்திலும் அந்த வேலை குறித்த நினைவாகவே இருப்பார்கள்.
- ஒரு வேலையில் சேர்ந்தபிறகுகூட அந்த வேலைக்குத் தேவைப்படும் திறன்கள், நுணுக்கங்கள் மற்றும் பயிற்சிகளை முழுமையாகப் பெறுவதில் சராசரி மனிதர்கள் ஈடுபாடு காட்டுவதில்லை. ஆர்வமுள்ள மனிதர்களோ, அந்த வேலைக்குத் தேவைப்படும் எல்லாப் பயிற்சிகளையும் எங்கெங்கு கிடைக்கிறதோ அங்கெல்லாம் போய்க் கற்றுக்கொள்கிறார்கள்.
- ஒரு வேலையில் சம்பளமாகக் கிடைக்கும் பணத்தை மட்டுமே பலனாக நினைப்பவர்கள் சராசரி மனிதர்கள். ஆர்வமுள்ள மனிதர்களுக்கு அந்த வேலையில் கிடைக்கும் அனுபவங்களும் நிறைவுமே முதன்மையாகத் தெரியும். வருமானம் என்பது அடுத்த விஷயம்தான்.
- சராசரி மனிதர்களுக்குத் தாங்கள் செய்யும் வேலையில் பெரிதாக வளர்ச்சியே கிடைக்காது. அவர்கள் அதற்கான நபர்கள் இல்லை என்பதை நிறுவனங்கள் தெரிந்துகொள்ளும். ஆனால், ஆர்வமுள்ள மனிதர்கள் தங்கள் வேலையைக் கூடுதல் திறமையுடன் செய்து நிறுவனத்துக்கு உயர்வைத் தருவதால் அவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு என்று எல்லாமே கிடைக்கும்.
- சராசரி மனிதர்களின் வரவைப் பெரிய பலமாகவோ, அவர்கள் வேலையை விட்டுப் போவதை இழப்பாகவோ நிறுவனங்கள் நினைப்பதில்லை. ஆனால், ஆர்வமுள்ள பணியாளர்களை எந்த நிறுவனமும் இழக்க விரும்பாது. ஒருவேளை அவர்கள் அப்படி வெளியேற நேர்ந்தாலும், அவர்களை எப்படியாவது திரும்ப வேலைக்கு இழுக்க முயற்சி செய்துகொண்டே இருப்பார்கள்.



Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL


Inners for Winners
RAMRAJ
BANIANS
BRIEFS • TRUNKS
Thrive with strength, conviction and comfort
Shreyas Iyer - Cricketer
SCAN QR CODE FOR STORE LOCATION
SUKRA
Super Fine Banians
ROMEX
Supreme Banians
RISE-UP
Premium Banians
ARCHERY
Gym Vest
COMPACT
Flexible Rib Vest
ACOSTE
BANIANS | BRIEF | TRUNKS
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-12-2023. Posted at Tirupur BPC on 5th of every month.

